# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN

# தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை

லூக்கா 1:37



THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG

March - April 2025
Volume : 65

ஆண்டு சந்தா ₹120/-
Issue : 2

## மத்திய CA வாலிபர் முகாம் - 2025













## Global University பட்டமளிப்பு விழா - 2025












ஆசிரியரிடமிருந்து........!



# "தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை"

நாம் சேவிக்கும் கர்த்தர் சர்வ வல்லமையுள்ள தேவன். அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்று வேதம் சொல்லுகிறது (லூக்கா 1:37). அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவருடைய அற்புதம் செய்யும் வல்லமை இன்றும் மாறி போகவில்லை (எபி.13:8). அவரை விசுவாசித்தால் உங்கள் வாழ்வில் நிச்சயம் அற்புதம் செய்வார். 'தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை' என்கிற இந்த வசனத்தை ஐந்து கோணங்களில் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## 1. தேவனால் தீர்க்க முடியாத பிரச்சனை ஒன்றுமில்லை (There is no PROBLEM too hard for God to solve)

நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் கடினமான, சவாலான மற்றும் நெருக்கமான சூழ்நிலைகளுக்குள் கடந்து செல்லுகிறோம். ஆனால் தேவன் நம்மோடிருந்தால் எந்த சூழ்நிலையையும் மேற்கொள்ள முடியும். பலத்தினாலும் அல்ல, பராக்கிரனாமத்திலும் அல்ல, தேவனுடைய ஆவியினாலேயே ஆகும். பெரிய பர்வதமே! நீ எம்மாத்திரம்? ...நீ செருபாபேலுக்கு (தேவ பிள்ளைக்கு) முன்பு சமபூமியாவாய் என்று வேதம் சொல்லுகிறது (சகரி.4:6,7). நீங்கள் இன்று சந்திக்கும் "மலை" போன்ற பிரச்சனை என்ன? வியாதியா? பொருளாதார நெருக்கடியா? வேலையில், குடும்பத்தில், திருமணத்தில் பிரச்சனையா? நாளைய தினத்தை எப்படி சந்திப்பது என்று கவலையா? அப்படியானால் இதை அறிந்து கொள்ளுங்கள்-"தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை" (லூக்.1:37).

5000 புருஷர்களுக்கு உணவளிக்க வேண்டும் என்கிற பெரிய சவாலை சீஷர்கள் எதிர்கொண்டனர். இருந்ததை கொடுத்தபோது இயேசு அற்புதம் செய்து தேவையை சந்தித்தார் (மத்.14:16-20). முன்பாக செங்கடல் பின்புறம் எகிப்தின் சேனை என்ற இக்கட்டான சூழ்நிலையை இஸ்ரவேலர் சந்தித்தபோது கர்த்தர் அற்புதமாக செங்கடலை பிளந்து வழிதிறந்தார் (யாத்.14:21,22). வழியே இல்லாத இடத்தில் அவர் உங்களுக்காக வழியைத் திறப்பார் (ஏசாயா 43:19). கோணலானவைகளைச் செவ்வையாக்குவார் (ஏசாயா 45:2). நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர். என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ? என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே.32:27). ஆகவே திடன் கொள்ளுங்கள்! கர்த்தரை நம்புங்கள். அவர் அற்புதம் செய்வார்.

## 2. தேவனால் நிறைவேற்ற முடியாத வாக்குத்தத்தம் ஒன்றுமில்லை (There is no PROMISE too hard for God to fulfill)

நம்முடைய தேவன் தமது வார்த்தையை நிறைவேற்ற வல்லவர் (யோசுவா 23:14; 1 சாமு.3:19; 2 நாளா.6:10,15; நெகே.9:8). தேவன்

பொய் சொல்ல ஒரு மனிதன் அல்ல, அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா என்று வேதம் கூறுகிறது (எண்.23:19). கர்த்தர் ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் வயது சென்ற நிலையிலும், பிள்ளையில்லாத அவர்களுக்கு ஒரு பிள்ளையைத் தருவேன் என்று வாக்குப்பண்ணினார் (எபி.11:12). அவர் சொன்னபடியே நிறைவேற்றினார் (ஆதி.21:1). ஈசாக்கின் பிறப்பு, கர்த்தர் தம்முடைய வார்த்தையை நிறைவேற்ற உண்மையும், வல்லமையும் உள்ளவராயிருக்கிறார் என்பதற்கு சான்றாகும். இஸ்ரவேலர்கள் கர்த்தர் தங்களுக்கு வாக்குப் பண்ணினபடியே கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொண்டனர் (யாத்.3:8; 6:6-8). யோசுவா ஜனங்களை நோக்கி, “கர்த்தர் உங்களுக்குச் சொன்ன நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை; அவைகளெல்லாம் உங்களுக்கு நிறைவேறிற்று” என்று கூறினான் (யோசுவா 23:14; 21:45). ஆம் கர்த்தர் தம்முடைய வாக்கை உங்கள் வாழ்வில் நிச்சயம் நிறைவேற்றுவார். தாமதித்தாலும் நிச்சயம் நிறைவேறும் (ஆபகூக் 2:3). பொறுமையாயிருங்கள். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை!

## 3. தேவனால் பதிலளிக்க முடியாத ஜெபம் ஒன்றுமில்லை (There is no PRAYER too hard for God to answer)

நாம் சேவிக்கிற தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கிறவர் (யோவான் 14:14). என்னை நோக்கி கூப்பிடு. அப்பொழுது நான் உனக்கு மறு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்” என்று கர்த்தர் சொல்கிறார் (எரே.33:3). தேவ மனிதர்கள் ஜெபித்தபோது கர்த்தர் ஆச்சரியமான காரியங்களைச் செய்திருக்கிறார். ஆபிரகாம் தேவனை நோக்கி ஜெபித்தபோது தேவன் அபிமெலெக்கையும் அவன் மனைவியையும் குணமாக்கி, பிள்ளை பெறும்படி அநுக்கிரகம் பண்ணினார் (ஆதி.20:17). யோசுவா ஜெபித்தபோது, சூரியனை தரித்து நிற்க செய்தார் (யோசுவா 10:12). எலியா ஜெபித்தபோது வானத்திலிருந்து அக்கினி இறங்கிற்று (1 இராஜா.18:36-38). பேதுரு ஜெபித்தபோது, மரித்த பெண் உயிரோடு எழும்பினாள் (அப்.9:40). தேவனால் பதிலளிக்க முடியாத ஜெபம் என்று ஒன்றும் இல்லை. நாம் அவருடைய சித்தத்தின்படி சுத்த இருதயத்தோடு வேண்டிக்கொள்ளும்போது அவர் நிச்சயம் நமக்கு பதிலளிப்பார் (1 யோவான் 3:21,22;5:14). நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது (யாக்.5:16). ஜெபியுங்கள்! அற்புதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்!

## 4. தேவனால் இரட்சிக்கமுடியாத நபர் ஒருவருமில்லை (There is no PERSON too hard for God to save)

இரட்சிக்கக்கூடாதபடி கர்த்தருடைய கரம் குறுகிப்போகவில்லை என்று வேதம் சொல்லுகிறது (ஏசா.59:1;50:2; எண்.11:23). இரட்சிக்க முடியாத நபர் என்று அவருடைய பார்வையில் ஒருவரும் இல்லை. ஒவ்வொரு நாளும் இயேசு ஆயிரக்கணக்கான நபர்களை இரட்சித்து, தம்முடைய மந்தைக்குள் சேர்த்து வருகிறார். குடிகாரர்கள், கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்கள், விபச்சாரக் காரர்கள் என பலரும் இயேசுவின் வல்லமையுள்ள இரத்தத்தினால் கழுவப்பட்டு, இரட்சிக்கப்பட்டு வருகின்றனர். நீங்கள் யாரோ சிலருடைய இரட்சிப்பிற்காக ஜெபித்து

வரலாம். ஒருவேளை அவர்கள் இன்னும் மனந்திரும்பாமல் இருக்கலாம். தொடர்ந்து ஜெபியுங்கள். கர்த்தர் நிச்சயம் அவர்களை இரட்சிப்பார். சகேயு, பவுல், லீதியாள் போன்றவர்களை இரட்சித்த தேவன் உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் நீங்கள் ஜெபிக்கும் நபர்களையும் அவர் இரட்சிக்க வல்லமையுள்ளவர் (லூக்கா 19:9; அப்.9:1-6; 16; 14,15).

## 5. தேவனால் எழுப்புதல் கொண்டு வரமுடியாத இடம் ஒன்றுமில்லை (There is no PLACE too hard for God to bring revival)

எசேக்கியேல் தீர்க்கதரிசி, எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கை தன்னுடைய தரிசனத்தில் கண்டார் (எசே.37:1-10). அந்த இடம் மிகவும் நம்பிக்கையற்றதாகவும், உயிரற்றதாகவும் இருந்தது, ஜனங்களும் 'எங்கள் நம்பிக்கை அற்று போயிற்று' என்றார்கள் (வச.11). ஆனால் தேவன் நம்பிக்கையற்ற இடத்தில் நம்பிக்கை தருகிறவர். உலர்ந்த எலும்புகளை உயிரடைய செய்கிறவர். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. நீங்கள் ஊழியம் செய்யும் கிராமத்திலும், பட்டணத்திலும் தேவன் மகிமையான எழுப்புதலை கொண்டு வருவார். நாம் தொடர்ந்து ஜெபித்து சுவிசேஷ பணியை செய்வோம். நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று வாக்குபண்ணியிருக்கிறார் (அப்.2:17). அவர் அவாந்திர வெளியை தண்ணீர் தடாகமாகவும், வறண்ட நிலத்தை நீரூற்றாகவும் மாற்ற வல்லவர் (சங்.107:35). கர்த்தரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை! ஆமென்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்தரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000.** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



# இயேசு கிறிஸ்துவின் வருகையும், உலக முடிவும் அதிசீக்கிரம்

Rev. P.S. ராஜமணி

**நிறைவேறிக்கொண்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள்** (பாகம் -2)

## 8. பஞ்சம், (பட்டினி) மத்தேயு 24:7

கடந்த காலங்களில் ஏற்பட்ட பஞ்சங்களைவிட இன்றைய நாட்களில் பஞ்சம் பெருகி வருகிறது. உலக அளவில் ஏற்பட்ட பஞ்சங்களின் அட்டவணையை சுருக்கமாய் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| 15ம் நூற்றாண்டில் | - | 6 பஞ்சங்கள் |
| 16ம் நூற்றாண்டில் | - | 10 பஞ்சங்கள் |
| 17ம் நூற்றாண்டில் | - | 24 பஞ்சங்கள் |
| 18ம் நூற்றாண்டில் | - | 28 பஞ்சங்கள் |
| 19ம் நூற்றாண்டில் | - | 30 பஞ்சங்கள் |
| 20ம் நூற்றாண்டில் | - | 44 பஞ்சங்கள் |

உலக மக்களில் மூன்றில் ஒரு பங்கு நன்கு சாப்பிடுகிறார்கள், மூன்றில் ஒரு பங்கு போதிய உணவில்லாமல் இருக்கிறார்கள், மூன்றில் ஒரு பங்கு பட்டினியாயிருக்கிறார்கள் என்று உலக ஆரோக்கிய நிறுவனம் கூறுகிறது.

## 20ம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சத்தால் செத்தவர்கள்

ஒவ்வொரு 3.6 வினாடியிலும் பட்டினியால் ஒருவர் எங்கோ மரித்துக் கொண்டிருக்கிறார்.

- 1921ல் ரஷ்யாவில் ஏற்பட்ட பஞ்சத்தால் 50 இலட்சம் பேர் மடிந்தனர்.
- 1928, 1929 ஆண்டுகளில் சீனாவில் ஏற்பட்ட பஞ்சத்தால் 30 இலட்சம் பேர் இறந்தனர்.
- 1932-1933 ஆண்டுகளில் உக்ரேன் நாட்டில் நடந்த பஞ்சத்தால் 1 கோடி பேர் மாண்டனர்.
- 1932 - 1933 ஆண்டுகளில் கசகஸ்தான் நாட்டில் பஞ்சத்தால் 13 இலட்சம் பேர் மரித்தனர்.
- 1936ல் சீனாவில் ஏற்பட்ட பஞ்சத்தால் 50 இலட்சம் பேர் மடிந்தனர்.
- 1942-1943 ஆண்டுகளில் சீனாவில் 10 இலட்சம் பேர் செத்தனர்.
- 1946-1947 ஆண்டுகளில் சோவியத் யூனியனில் ஏற்பட்ட பஞ்சத்தால் 10 இலட்சம் பேர் மாண்டனர்.
- 1959-1961 ஆண்டுகளில் சீனாவில் ஏற்பட்ட பஞ்சத்தால் 3 கோடியே 60 இலட்சம் பேர் மரித்தனர்.
- 1932-1961 ஆண்டுகளில் இன்னும் பல நாடுகளில் பஞ்சத்தால் மரித்தவர்களின் எண்ணிக்கை 6 கோடியே 20 இலட்சம் பேர்.

2011-ம் ஆண்டு கணக்குப்படி உலகில் 92.5 கோடி மக்கள் பட்டினியில் வாடுகிறார்கள். இதில் ஆசியா கண்டத்தில் 58 கோடி, ஆப்பிரிக்கா கண்டத்தில் 28 கோடி, லத்தீன் அமெரிக்கா நாடுகளில் 6.5 கோடி பேர். இன்று அமெரிக்கா மட்டும் ஒரு ஆண்டிற்கு 13 பில்லியன் டாலர் (65000 கோடி ரூபாய்) வாசனைத் திரவியங்களுக்காக செலவு செய்கிறது. இந்தப் பணத்திற்கு சாப்பாடு வாங்கினால் உலகில் ஒருவரும் பட்டினியாயிருக்க அவசியமிராது.

உலகில் பட்டினியாய் வாழும் மக்களில் பாதிப் பேர் இந்தியர். ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வைத்துள்ள பணக்காரர்கள் உலகில் 358 பேர், உலகப் பொருளாதாரத்தின் 45 சதவிகித பணம் இந்த 358 பேரிடம் உள்ளது. அதே சமயம் உலகிலுள்ள 300 கோடி பேர் தினமும் 100 ரூபாய்க்கு குறைவாகவே சம்பாதிக்கின்றனர். அமெரிக்காவிலேயே 8 பிள்ளைக்கு 1 பிள்ளை இரவு சாப்பாடு இல்லாமல் படுக்கைக்குச் செல்கிறது.

### 9. கொள்ளைநோய்கள் (லூக்கா 21:11)

கடந்த நூற்றாண்டுகளில் கேள்விப்பட்டிராத நோய்களெல்லாம் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன.

#### புற்றுநோய்

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஒவ்வொரு நாடுகளிலும் ஏராளமானவர்கள் இருக்கின்றனர்.

#### எய்ட்ஸ் நோய்

தகாத உறவுகள் மூலம் அறிமுகமான இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கோடான கோடி பேர். இன்றுவரை இந்த நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்பட வில்லை. அமெரிக்காவில் மட்டும் சுமார் 60 இலட்சம் பேர் எய்ட்ஸ் வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகிலுள்ள மக்களில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ள வர்கள் 3.4 கோடி பேர். எய்ட்ஸ் நோயுடன் வாழும் பெண்கள் 2 கோடி பேர்.

#### இந்தியா

இந்தியாவில் 1986ல் எய்ட்ஸ் நோயுள்ளவர் ஒருவரும் இல்லாமலிருந்தது. இப்போது இந்தியாவில் 2 கோடி பேர் இந்த நோயுள்ளவர்கள். சென்னையில்தான் முதன்முதலாக இந்தியாவில் எய்ட்ஸ் நோயுள்ளவர் கண்டுபிடிக்கப்பட்டார். ஆந்திராவில் விபச்சாரம் அதிகம். அங்கேதான் எய்ட்ஸ் நோயும் அதிகம். இன்று இந்தியாவில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக இருக்கும் மாநிலங்கள், ஆந்திரா, கர்நாடகா, கோவா, மகாராஷ்ட்ரா, தமிழ்நாடு, மணிப்பூர், மிசோராம், மேகாலயா, பஞ்சாப்.

#### பன்றிக் காய்ச்சல்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஓர் வியாதி பன்றிக் காய்ச்சல் (எந்த பன்றியும் இந்த காய்ச்சலுடன் அலைவதாக தெரியவில்லை). நாளுக்கு நாள் புதிய புதிய வியாதிகள் பரவி மனிதர்களை சாவுக்கு நேராக நடத்துகின்றன.

### 10. மனிதத் தன்மையற்ற மக்கள் கூட்டம் பெருகும்

"மேலும் கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக்

கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர் களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர் களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப் பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத்தரித்து, அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்" (2 தீமோ. 3:1-5).

கடைசி காலத்தில் அன்பற்ற, பண்பற்ற தன்மையுள்ளவர்கள் பெருகுவார்கள் என்பதின் நீண்ட பட்டியல் இங்கே கூறப்பட்டுள்ளது. இந்த பட்டியலுள்ளதை விளக்க ஆரம்பித்தால், அதுவே ஒரு புத்தகமாக மாறிவிடும். தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்ற எண்ணமே இல்லாமல், எனக்கு இது பிரியம், ஆகவே இப்படி செய்கிறேன் என்ற மனப்போக்கு பெருகி வருகிறது. பணமே கடவுளாக மாறிவிட்டது. மிருகங்கள் கடவுளைத் தேடுவதில்லை. மனிதனுக்குத்தான் கடவுளைப் பற்றிய அறிவு இருக்கிறது. இவனும் தேவனைத் தேடுவதை விட்டுவிட்டு பணத்தைத் தேடும்போது இவனுக்கும், மிருகத்திற்கும் வித்தியாசமில்லை.


பெற்றோரை மதிக்காத பிள்ளைகள் கூட்டத்தை எங்கும் பார்க்கலாம். ஆயுசு நாள் நீடிக்க பெற்றோரை கனம்பண்ண கட்டளை கொடுத்துள்ளார் தேவன். இன்று பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் கொஞ்ச வயதிலேயே மரிக்கிறார்கள். என்ன உதவி செய்தாலும், நன்றியில்லாத கூட்டம் பெருகுகிறது. என்னத்தைச் செய்துவிட்டார் என்று குறைகூறுவோர் ஏராளம். சுபாவ அன்பில்லாதவர்கள் ஏராளம். மிருகங்கள் கூட தன் குட்டிகளை சரியாக பராமரிக்கின்றன. பிள்ளைகள் மேல் அன்பில்லாத பெற்றோர். மனைவியை நேசிக்காத கணவன், கணவனை நேசிக்காத மனைவியை எங்கும் காணலாம். விவாகரத்துக்கள் பெருக இதுவும் ஒரு காரணம்.

தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு போலியான பக்திமானாய் நடிக்கும் கூட்டம் எல்லா மதங்களிலும் உண்டு. கிறிஸ்தவரும் இதற்கு விதிவிலக்கல்ல. சபைகளின் ஆராதனைகளில் பக்தியுள்ளவர்கள் போல கலந்துகொண்டு, சகல பாவங்களையும் செய்யும் ஆண்கள் பெண்கள் எல்லா சபைகளிலும் கணிசமான அளவு வளர்ந்துவிட்டார்கள். உலகில் காணப்படும் பொருளாசை, விபச்சாரம், வேசித்தனம், குடி, வெறி, லஞ்சம், அடிதடி, விவாகரத்து அத்தனையும் சபையாரிடம் காணப்படுவது எத்தனை வேதனை.

- தொடரும்.

## THE PASSION OF CHRIST

There are five key words that explain what happened when Jesus died on the cross.



1. "**Substitution** : He Traded Places" - 2 Corinthians 5:21
2. "**Redemption** : He Paid a Ransom" - Galatians 3:13; Matt. 20:28
3. "**Justification** : He Made Sinners Right with God" - Romans 3:21-26
4. "**Propitiation** : He Endured the Wrath of God" - 1 John 2:2; 4:10
5. "**Reconciliation** : He Removed the Hostility of Sin" - Romans 5:9-11



# திறந்த வானம்


## திருமதி. கெட்சியாள் மோகன்

President, Women's Fellowship Department


கிறிஸ்துவிற்குள் அன்பான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். "இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்" (வெளி. 3:8) என்ற இந்த வருட வாக்குத்தத்தத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஆவிக்குரிய பிரயாணத்தை செய்து கொண்டிருக்கும் நமக்கு முன்பாக வாசல்கள் திறக்கப்பட வேண்டுமானால், நாம் கர்த்தருடைய பிரசன்னத்தைப் பின் தொடர வேண்டும். யோர்தானில் வழியை பெற வேண்டுமானால், இஸ்ரவேலர்கள், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைக் கண்டவுடன், அதற்குப் பின்செல்ல வேண்டும் என்று யோசுவா கட்டளையிட்டார் (யோசுவா 3:3). நமக்கு முன்பாக அடைக்கப்பட்டிருக்கும் எந்த வாசலும் திறக்கப்பட வேண்டுமானால், நமக்கு முன்னே கர்த்தருடைய பிரசன்னம் போக வேண்டும், நாம் அதைப் பின் தொடர வேண்டும். கர்த்தருடைய தாசனாகிய மோசேயும், உம்முடைய சமூகம் எங்களுக்கு முன் செல்லாதிருந்தால், எங்களை இவ்விடத்திலிருந்து அழைத்துக் கொண்டு போகாதிரும் என்று ஆண்டவரிடம் மன்றாடினார். தேவ சமூகம் இல்லாமல் நம்மால் நம் பிரயாணத்தைத் தொடர முடியாது. கர்த்தருடைய பிரசன்னத்தை உணர வேண்டுமானால், நாம் பரிசுத்தமாய் இருக்க வேண்டும். நாம், நம்மைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளும்போது அற்புதங்களைக் காண்போம். கண்டித்து உணர்த்துகிற பரிசுத்த ஆவியானவரின் துணையோடும், பாதைக்கு வெளிச்சமாயிருக்கிற வேதவசனத்தினாலும், அனுதினமும் நாம், நம்மை சுத்திகரித்துப் பரிசுத்தமாக்கிக் கொள்ளும்போது வாசல்கள் திறக்கப்படும், அற்புதங்களைக் காண்போம்.

### வானம் திறக்கப்படுதல் (மோசேயின் அனுபவம்)

வானம் திறக்கப்பட்டு, கர்த்தர் இறங்கி வர வேண்டுமானால், விடியற்காலத்தில் மோசே, ஆயத்தமாகி, கர்த்தர் சமூகத்தில் வந்து நிற்க வேண்டும் என்று ஆண்டவர் அவருக்குக் கட்டளை கொடுத்திருந்தார். மோசே அப்படி செய்தபோது, கர்த்தர் ஒரு மேகத்தில் இறங்கி, அங்கே அவன் அருகே நின்றார் என்றும் பார்க்கிறோம் (யாத்திராகமம் 34:2,5). அவரை சந்திக்க தேவன் ஒரு நேரத்தைக் குறிப்பிடுகிறார். விடியற்காலம் அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள் என்று நீதிமொழிகள் 8:17-ல், வாசிக்கிறோம். குறிப்பிட்ட நேரத்தை தேர்வுசெய்து, அதைக் கடைபிடிக்கத் தீர்மானியுங்கள். விடியற்காலத்தில், ஆயத்தமாகி என்று கூறுகிறார். சரீர பிரகாரமாகவும் நாம் ஆயத்தமாக வேண்டும். அதிகாலையில், பல் துலக்கி, முகம் கழுவி, தலை சீவி, கர்த்தாதி கர்த்தரைச் சந்திக்கப் போகிறோம் என்கிற பயபக்தியுடன் அவர் சமூகத்திற்கு செல்வது நல்லது. இது, நாம் விழிப்பாக இருக்க நமக்கு உதவி செய்கிறது.

அப்படி ஆயத்தமாகி வந்து , தேவ சமூகத்தில் நாம் நிற்கும்போது, தேவன், தாம் யார் என்பதை நமக்கு வெளிப்படுத்துவர். அவன் அருகே நின்று கர்த்தருடைய நாமத்தைக் கூறினார் என்று (யாத்.34:5) வாசிக்கிறோம். கர்த்தர், (LORD) என்றால், எல்லாவற்றையும் ஆளுகிறவர் என்று பொருள். அப்படி ஆண்டவர் தம்மை வெளிப்படுத்தும்போது, நாம் எதைக் குறித்தும் கலக்கமடைய மாட்டோம். ஏனென்றால், தேவன் தான் நம் வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளையும் ஆண்டு கொண்டிருக்கிறார் என்ற விசுவாசத்தின் நிச்சயம் நமக்குக் கிடைத்து விடும்.

ஆண்டவர் தம்மை வெளிப்படுத்தினப் பின்பு, மோசே, தீவிரமாக தரை மட்டும் குனிந்து பணிந்து கொண்டார் என்று (யாத்.34:8) வாசிக்கிறோம். கர்த்தர் தாம் யார் என்பதை வெளிப்படுத்த, வெளிப்படுத்த, நாம் அவரை தொழுது கொள்ளவேண்டும். நாம் அப்படியே அவரைத்தொழுது ஆராதிக்கும்பொது, ஆண்டவர், நமக்கான வாக்குத்தத்தங்களைத் தருவார். 10 ஆம் வசனத்தில் தேவன் மோசேயை எப்படிப் பயன்படுத்தப் போகிறார் என்ற வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார்.

## இயேசுவானவரின் அனுபவம்

இயேசுவானவரும், ஞானஸ்நானம் பெற்று ஜெபித்தபோது, வானந்திறக்கப்பட்டு. பரிசுத்த ஆவியானவர் இறங்கினார் என்று லூக்கா 3:21,22-ல், வாசிக்கிறோம். நாம், ஞானஸ்நானம் பெறும்போது பழைய பாவ மனுஷனை, தண்ணீருக்குள் அடக்கம் பண்ணுகிறோம். அப்படிச் செய்யாமல், புதிய மனுஷனோடு சேர்த்து, மரித்த அந்தப் பழைய மனுஷனையும், வைத்துக் கொண்டிருப்போமானால், நோய்த்தொற்று (Infection) ஏற்பட்டு விடும். ஆகவே பழைய பாவ மனிதன் கண்டிப்பாக புதைக்கப்பட வேண்டும். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் பொழியப்படுவார்.

என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் என்று யோவான் 14:16 ல், வாசிக்கிறோம். அவர் வந்து பாவத்தைக்குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார் (யோவான் 16:8). அவர் கண்டித்து உணர்த்தும்போது, நாம் அதை ஏற்று நம்மை மாற்றிக்கொள்ளும்போது பரிசுத்தமடைகிறோம். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் (வசனம் 13). அவரின் வழிகாட்டுதலின்படி நடக்கும்போது, நாம் அவருடைய புத்திரர் என்று என்னப்படுவோம் (ரோமர் 8:14,15). “அப்பா பிதாவே” என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றுக் கொள்வதினால் அவரை எந்நேரமும் உரிமையோடு அழைத்துப்பேசலாம். சரீர பலவீனத்தை மாற்றி, சாவுக்கேதுவான நம் சரீரத்தை உயிர்ப்பிப்பார் (வசனம் 11). நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சிகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் (வசனம் 26). மாத்திரமல்ல, ஆவியாயிருக்கிற கர்த்தரால், அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம் (2 கொரிந்தியர் 3:18). நமக்காக வேண்டுதல் செய்வதோடு மட்டுமல்லாமல், கர்த்தருடைய மகிமையின் சாயலாக நம்மை மறுரூபப்படுத்துவதின் மூலம், கிறிஸ்துவின் மணவாட்டிகளாக நம்மை அவருடைய வருகையின் நாளுக்கென்று ஆயத்தப்படுத்துகிறார்.

## கொர்நேலியுவின் அனுபவம்

(அப்.10:2-4) கொர்நேலியு, தேவபக்தியுள்ளவனும், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தான். அவனுடைய ஜெபங்களும், தானதர்மங்களும் தேவனுக்கு நினைபூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது என்று தேவதூதன் வானத்திலிருந்து இறங்கிவந்து பேசினான். நற்கிரியைகளைத் தாண்டி, அவன் ஜெபஜீவியம் அதிகமாய் இருந்தது. எப்பொழுதும் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான். நம்முடைய ஜெபங்கள், சுகந்த வாசனையாகவும் (ஆதி.8:21) விண்ணப்பங்கள் தூபமாகவும் கையெடுப்பு, அந்திபலியாகவும் மாறும்போது வானம் திறக்கப்படும் (சங்கீதம் 141:2).

இப்புதிய வருடத்தில், வானம் திறக்கப்பட்டு, அதினால் வரும் சகல ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள தேவன் உங்களைத் தகுதிப் படுத்துவாராக!. மூடப்பட்டிருக்கும் சகல வாசல்களும், நீங்கள் அவருடைய நிபந்தனைகளை நிறைவேற்றும்போது, திறக்கப்படுவதாக! ஆமென்! அல்லேலுயா!

# A.G. தமிழ்நாடு வேதாகமக் கல்லூரி

(An ATA Accredited College)

மதுரை - 625 016

Email : agtbc1948madurai@gmail.com Website : www.agtbc.org

## I. Residential Studies (For Men only)

### 1. Master of Divinity (M.Div.)

**Medium** : English | **Duration** : 3 Years

**Eligibility :** Any Degree from Recognized University (10+2+3)

B.Th. Degree (ATA Accredited) with B+ or B Grade

### 2. Bachelor of Theology (B.Th.)

**Medium** : English and Tamil | **Duration** : 3 Years

**Eligibility** : +2 Pass (10+2)

### 3. Diploma in Theology (Dip.Th.)

**Medium** : Tamil | **Duration** : 2 Years

Eligibility: S.S.L.C. (X Pass)

## II. Modular Studies (For Men & Women)

### 1. Master of Divinity (M.Div.)

**Medium** : English | **Duration** : 3 Years

Eligibility: Any Degree from Recognized University (10+2+3)

B.Th. Degree (ATA Accredited) with B+ or B Grade

Men must be above 25 years. Women must have been married.

### 2. Bachelor of Theology (B.Th.)

**Medium** : Tamil | **Duration** : 3 Years

Eligibility: +2 Pass or Diploma in Theology (10+Dip.Th.) (ATA Accredited)

Men must be above 25 years. Women must have been married.

## III. Extension Studies

### 1. Diploma in Theology (Dip.Th.)

**Medium** : Tamil | **Duration** : 3 Years

Eligibility: S.S.L.C. (X Pass)

*Note : Men and Women with jewels are not admitted.*

கி.பி.2025-26-க்கான நிரப்பப்பட்ட விண்ணப்ப படிவம் வரவேற்கப்படுகின்றன.
2.06.2025 முதல் வகுப்புகள் ஆரம்பமாகும்.

**விண்ணப்ப படிவத்திற்கு**

**Download Application Form : www.agtbc.org**

தொடர்பு: *Director of Admissions*

**AG Tamilnadu Bible College**

Bye Pass Road, Kalavasal, Madurai - 625 016.

Cell : 99769 81926, 9003 514215, Ph: 0452 2601940.



தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கிய ஊழியங்கள்

# தேவன் எதிர்பார்க்கும் புருஷர் நீங்களே!

**Rev. ஆண்டனி ராஜன்**
பொருளாளர், தமிழ் பிரதேச ஏ.ஜி. சபைகள்

கிறிஸ்துவுக்கு அன்பான ஆண்கள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவன் விரும்பும் புருஷர்களாக நாம் இருக்க தேவன் நமக்கு உதவி செய்வாராக. இந்த அவசர உலகத்தில் நம்மை பாதுகாக்கவும் தற்காக்கவும் இயலாத சூழ்நிலைகள் அநேகம் இருக்கின்றன, ஆனால் இந்த உலகத்தின் போக்கில் நாம் வாழ வழிகள் ஏராளம் தான். தேவனால் அபிஷேகிக்கப்பட்டு அவரால் இரட்சிக்கப்பட்டு, அவரிடத்தில் நன்மையை பெற்ற நாம் அவரை மறந்து போகக்கூடிய சூழ்நிலைக்கு தள்ளவே படக்கூடாது. அது நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அது ஆரோக்கியமானதாக எப்பொழுதும் இருக்காது.

## அர்ப்பணிப்புள்ள புருஷர்

**தேவன் யாக்கோபை நோக்கி: நீ எழுந்து பெத்தேலுக்குப் போய், அங்கே குடியிருந்து, நீ உன் சகோதரனாகிய ஏசாவின் முகத்திற்கு விலகி ஓடிப்போகிறபோது, உனக்குத் தரிசனமான தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கு என்றார் (ஆதி. 35:1).**

யாக்கோபினுடைய வாழ்க்கையில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான ஒரு காரியத்தை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். தன் சகோதரனுக்கு பயந்து அவர் ஓடிப்போன பொழுது ஆண்டவர் அவருக்கு தரிசனமானார். தரிசனமான ஆண்டவருக்கு நான் திரும்பி வருவேன் என்று சொல்லி வாக்குறுதிகளை கொடுத்து விட்டு செல்கின்றார். ஆதி.35-ம் ஆதிகாரத்திற்கு வரும்பொழுது அவரிடம் ஒரு ஆவிக்குரிய தலைவருடைய செயல்பாட்டை நாம் பார்க்கிறோம். அந்த செயல்பாட்டிலே நாம் தெரிந்து கொள்ளவேண்டிய மிக முக்கியமான காரியமானது ஆண்டவர் பேசிய உடனே பலிபீடத்தை கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லுகிறார். ஆபத்தில் எனக்கு உதவின என் ஆண்டவரை மகிமைப்படுத்த நான் விரும்புகிறேன், நீங்களும் என்னோடு சேர்ந்து வாருங்கள் என்று சொல்லி அவர் மகிமைப்படுத்துகிறதை பார்க்கிறோம். தன்னுடைய குடும்பத்தினர் எல்லோரையும் ஆண்டவரை தொழுது கொள்வோம் வாருங்கள் என்று சொல்லி அவர் தெளிவுப்படுத்துவதை பார்க்கிறோம்.

ஒரு மூன்று காரியங்களை அங்கே அவர் வலியுறுத்துவதை பார்க்கிறோம்.

**அப்பொழுது யாக்கோபு தன் வீட்டாரையும் தன்னோடேகூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி: உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப்போட்டு, உங்களை சுத்தம்பண்ணிக்கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள் (ஆதி.35:2).**

**1. அந்நிய தெய்வங்களை விலக்கிப்போடுங்கள்.**

**2. உங்களை சுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள்.**

**3. வஸ்திரங்களை மாற்றுங்கள்** என்று வலியுறுத்துவதை பார்க்கிறோம். தேவன் தந்த குடும்பத்திற்கு ஆவிக்குரிய வாழ்க்கையில், குடும்ப ஐக்கியத்தில், தேவனை தேடுகிறதான விஷயத்தில் ஒரு மென்மையான முடிவை யாக்கோபு எடுத்து அதை சீர் செய்வதற்கு தன்னாலான முயற்சிகளை எடுத்து அதை சீர்படுத்துவதை பார்க்கிறோம்.

நாமும் நம்முடைய பிள்ளைகளுக்கு நல்ல ஆவிக்குரிய தகப்பனாக, நம்முடைய மனைவிக்கு நல்ல ஆவிக்குரிய தலைவனாக, நம்மோடு பழகுகிற, பேசுகிற நட்புக்கொள்கிற விசுவாச பெருமக்களுக்கு சிறந்த வழிகாட்டியாக, ஆவிக்குரிய தலைவனாக இருங்கள்! ஆயத்தமாக்கும் தலைவனாக இருங்கள்! அபிஷேகம் பெற்ற தலைவனாக இருங்கள்! தேசத்திலே நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவதற்கு உங்கள் மூலமாக தேவன் உங்களை இஸ்ரவேல் என்று அழைத்து உங்களை ஆசீர்வதிப்பாராக! உங்களுடைய ஜெபம், தெய்வீக பண்புகள் மூலமாக தேசத்திற்கு எழுப்புதல் உண்டாக்குவதற்கு கிருபை தருவதாக. அந்திய காரியங்கள் எதுவும் நம்முடைய வாழ்க்கையில் இல்லாதபடிக்கு நம்மை பார்த்துக்கொள்ள தேவன் கிருபை தருவாராக! உங்கள் குடும்பத்தை ஆவிக்குரிய வகையில் பாதுகாத்தும் உங்கள் குடும்பத்தை தற்பரிசோதனை செய்வதற்கு தேவன் உங்களை தலைவனாக வைத்திருக்கிறார். நீங்களே ஒரு ஆவிக்குரிய தலைவனாக இருக்க தேவன் வழி நடத்துவார்.

## கொடுக்கிற புருஷர்

**நான் காண்பிக்கும் தேசத்திற்கு நீ போ... (ஆதி.12:1)** என்ற தேவனுடைய கட்டளையை அவர் கேட்டபொழுது, அந்த கட்டளைக்கு கீழ்ப்படிந்து, தேவனை சார்ந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்குள் வந்தது. எனவே கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எப்பொழுதும் தேவனை சார்ந்திருக்க வேண்டும். குறிப்பாக ஆபிரகாமுடைய கொடுக்கும் பண்பை குறித்து வேதம் மிகத் தெளிவாக எழுதுகிறது. விசுவாசிகளின் தகப்பன் என்று சொல்வதற்கு இரண்டு முக்கியமான காரியங்களை “கொடுத்தல்” என்பதன் மூலமாக கற்றுக்கொள்ள முடியும்.

**தேவன் அவனுக்குச் சொல்லியிருந்த இடத்துக்கு வந்தார்கள்; அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தினான் (ஆதி. 22:9).**

1. **தன்னுடைய ஒரே மகனை ஆண்டவர் தன்னிடத்தில் கேட்டபோது அவர் உற்சாகத்தோடு ஆண்டவருக்கு கொடுத்தார்.**
2. **ஆண்டவருக்கு கொடுத்த பின்பு ஐயோ! நான் ஆண்டவருக்கு கொடுத்துவிட்டேனே, என்று ஏமார்ந்து நிற்பதல்ல... மாறாக அவர் விசுவாச வார்த்தையாக சொல்கின்றார். “கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்” அதற்கு ஆபிரகாம்: என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்றான்; (ஆதி.22:8).** கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் என்று சொன்னால் கொடுக்க வேண்டியது என் கடமை. பார்த்துக்கொள்ள வேண்டியது அவர் கடமை.

(அ) என்னை ஆசீர்வதிக்க வேண்டியது அவர் கடமை, இது ஒரு தியாக அர்ப்பணிப்பு கொடுத்தல்.

எனக்கு அருமையானவர்களே, இதை நீங்கள் கேட்டு படிக்கும்போது தேவனுக்கு கொடுக்கின்றதின் நிமித்தமாக நான் ஆசீர்வதிக்கப்படுவேன் என்பதை நீங்கள் உறுதியாக நம்பி தேவனுக்கு உண்மையோடும், உத்தமத்தோடும், எதிர்பார்ப்பில்லாத சிந்தையோடும், கொடுக்க பழக வேண்டும்.

## சாட்சியுள்ள புருஷர்

**அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன் (1தீமோ.2:8).**

ஆண்டவருடைய நாமம் மகிமைப்படுவதாக. இங்கே புருஷர் கோபமும் தர்க்கமும் இன்றி எல்லா இடங்களிலும் தங்கள் பரிசுத்த கரங்களை உயர்த்தி என்று பவுல் எழுதுகிறார். இந்த வசனத்தை நாம் வாசிக்கும்போது நாம் புரிந்துகொள்ள வேண்டிய இரண்டு முக்கியமான சத்தியம்.

1. ஒன்று நாம் சாட்சி நிறைந்த ஒரு ஜீவியம் வாழ்கிறோமா என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். நாம் வெளியிடங்களுக்கு ஒவ்வொரு நாளும் வேலைகளுக்கு செல்லக்கூடிய ஆண்களாக இருக்கிறோம். அப்படி இருக்கும் பட்சத்தில் நாம் வேலை செய்யக்கூடிய இடத்தில் நம்முடைய வாழ்க்கையின் மாதிரி ஜீவியம், நம்முடைய பேச்சுக்கள், நம்முடைய பழக்க வழக்கங்கள், இவைகள் எப்படி இருக்கிறது என்பதை நாம் சோதித்து பார்க்க வேண்டும். நம்முடைய சாட்சி தேவனுடைய பார்வையில் சரியில்லை என்கிற நிலைமை இருக்குமானால் அதை சீர்தூக்கி பார்க்க வேண்டியது நம்மேல் விழுந்த கடமையாக இருக்கிறது.
2. எனக்கு அருமையான புருஷர்களே நீங்கள் உங்களுடைய பரிசுத்த கரங்களை உயர்ந்துவது என்பது முதலாவது அது அர்ப்பணிப்பின் அடையாளம். தேவனுக்கு முன் நம்மை தாழ்த்துவதன் அடையாளம் அல்லது ஆண்டவரே என் கைகளை பாரும் என்று சொல்லி நாம் கைகளை விரித்து நம்முடைய வாழ்க்கையை அவரிடத்தில் ஒப்புக்கொடுப்பதற்கான ஒரு அடையாளமாக இருக்கிறது. நீங்கள் உங்கள் வாழ்க்கையில் உங்களுடைய சூழ்நிலைகளில் எல்லாவற்றையும் தேவ சமூகத்தில் ஒப்புக்கொடுக்கிறீர்களா? உங்கள் வாழ்க்கை தேவ சமூகத்தில் உயர்த்தப்படுகிறதா? உங்கள் வாழ்க்கை கர்த்தருடைய சமூகத்தில் உயர்த்தப்பட்டு அது நல்லதொரு தூபமாக தேவ சமூகத்தில் அது வருகிறதா? என்பதை நீங்கள் உயித்து, ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த சூழ்லில் தாமே தேவன் உங்களை தொடுவாராக. நீங்கள் எல்லா இடங்களிலும் ஆண்டவரை உயர்த்துகிற புருஷராய் இருந்தால் உங்கள் வாழ்க்கையில் வெற்றி நிச்சயம் வரும். உங்கள் வாழ்க்கையில் உயர்வு உண்டு. உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய மகத்துவத்தை உங்கள் கண்களால் பார்க்க முடியும்.

## உபதேசத்தில் நிலைத்திருக்கும் புருஷர்

பவுல் சபையாருக்கும் தீமோத்தேயுவுக்கும் சொல்லும் அறிவுரைகளை மிக முக்கியமானது. நீங்கள் எல்லா இடத்திலும், எல்லா நேரங்களிலும் கர்த்தருடைய திருவசனத்தை நீ போதிக்க வேண்டும் என்று சொல்லுகிறார். **சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு;** என்று பவுல் மிக அழகாக தன்னுடைய ஆவிக்குரிய மகனாகிய தீமோத்தேயுவுக்கு கூறுகின்றார் (2 தீமோ.4:2). இந்த நாட்கள் நவீனமான உபதேசங்கள், செழிப்பின் உபதேசம் மற்றும் ஆண்டவரை மகிமைப்படுத்துகிறோம் என்ற பெயரில் அவருடைய நாமத்திற்கு மகிமையற்ற தெளிவற்ற ஆராதனைகளை பார்க்கிறோம். ஆனால் கர்த்தருடைய வார்த்தை ஒரு மனிதனுக்கு நேராக வரும்போது அந்த வார்த்தை அவனை சீர்படுத்தும், ஸ்திரப்படுத்தும். அவனை சத்தியத்திற்குள் நிலவரப்படுத்தி ஒரு மகா பெரிய ஆவிக்குரிய தலைவனாக மாற்றும்.

ASSEMBLIES OF GOD ஸ்தாபனத்தில் இருக்கக்கூடிய எல்லா புருஷர்களும் நமது ஸ்தாபனத்தின் 16 உபதேசங்கள், அந்த உபதேசத்திற்கு அடுத்த காரியங்களை

பின்பற்ற நாம் எப்பொழுதுமே கடமைப்பட்டிருக்கிறோம். ஒருபோதும் எந்த நிலைமையிலும் நமக்கு கொடுக்கப்பட்ட உபதேசத்தில் இருந்து வழி விலகி புதியதொரு நவீன உபதேசங்களை எந்த விதங்களிலும் பின்பற்றாதிருங்கள். அது என்றைக்கும் நமக்கு ஆபத்தை உண்டுபண்ணும். நீங்கள் வேத வசனத்தை படிக்கும்போது, நீ மனந்தெளிவுள்ளவனாக இருக்க வேண்டும் என்று பவுல் எழுதுகிறார். நம்முடைய புருஷர்கள் எப்பொழுதும் கர்த்தருடைய வசனத்தை எல்லா இடங்களிலும் பேசுவதற்கு தைரியப்பட வேண்டும். வசனத்தை நிதானித்து பகுத்து அறியக்கூடிய அளவிற்கு விசுவாசிகள் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் வீடுகளிலே ஆவிக்குரிய புத்தகங்களை படியுங்கள். வேதத்தை படிக்கும் அதே சூழ்நிலையில் துணை புஸ்தகங்களை வாங்கி படியுங்கள். இவைகள் எல்லாம் உங்களுடைய வாழ்க்கையை வளர்ப்பதற்கும், உங்களை உபதேசத்தில் எந்த விதமான தவறில்லாதபடிக்கு, உங்கள் உபதேசத்தில் நீங்கள் நிலைநிற்க பெரும் உதவியாக இருக்கும். வசனத்தில் ஆர்வமுடையவர்களாகவும் வசனத்தில் தெளிவு உடையவர்களாகவும் உபதேசத்தில் தவறு இல்லாதவர்களாகவும் இருக்கும் ஆவிக்குரிய தலைவனாக நீங்கள் மாற கர்த்தர் உங்களை நடத்துவராக.

---

## மருத்துவக் குறிப்புகள்

### சாப்பிட்ட பிறகு செய்யக்கூடாதவை அவசியம் அறிவோம்! பல நோய்களை தவிர்ப்போம்!!

1. சாப்பிட்டவுடன் தண்ணீரை வயிறுமுட்ட குடிக்கக்கூடாது. இதனால் ஜீரணநீர் நீர்ந்து போய் அஜீரணமாகும். பல நோய் வர இது முக்கிய காரணமாக அமையும்.
2. சுமார் 40 நிமிடம் கழிந்து தண்ணீர் தாகம் எடுக்கும்போது அப்பொழுது குடிக்க வேண்டும்.
3. சாப்பிட்டதும் படுத்துவிடக்கூடாது. காரணம் குடல் செயல்பட மிகவும் சிரமப்படும். ஜீரணம் முறையாக நடக்காது.
4. குறைந்த ஒரு மணிநேரம் கழிந்தே உறங்க வேண்டும். இது மதியம் ஓய்வு எடுப்பவர்களுக்கும் பொருந்தும்.
5. சாப்பிட்டதும் குளிக்கக்கூடாது. குறைந்தது 2 மணிநேரம் கழித்தே குளிக்க வேண்டும்.
6. சாப்பிட்டு முடிந்ததும் எந்த பழங்களையும் சாப்பிடக்கூடாது. காரணம் உணவின் ஜீரண நேரம் குறைந்து 5 மணி நேரங்களாகும். பழங்களின் நேரம் அதிகபட்சம் 2 மணி நேரம் தான். இந்த வித்தியாசத்தால் நாம் சாப்பிட்ட பழம் வாயிவாக மாற்றம் பெரும். இதில் ஒரு பழக்கத்திற்கு மட்டும் விதிவிலக்கு அது பேரீச்சம்பழம்.
7. சாப்பிட்ட உணவு ஜீரணமாகாத நிலையில் வேறு உணவுகள் எதையும் உண்ணக்கூடாது. காரணம் இவ்வாறு சாப்பிட்டால் ஏற்கனவே சாப்பிட்ட உணவு ஜீரணத்தை கடுமையாக பாதிக்கும். இதனால் சுகர் பிரச்சனை வர காரணமாக அமையும்.
8. குளிர் பானங்கள், ஐஸ்கிரீம், ஐஸ்வாட்டர் இவைகளையும் குடிக்கக்கூடாது. காரணம் உணவு ஜீரணமாக நமது குடலில் வெப்பம் இருக்க வேண்டும். அந்த வெப்பத்தை இந்த குளிர்பானங்கள் இல்லாமல் செய்துவிடும்.
9. சாப்பிட்டதும் பரபரப்பாக இயங்குவதோ நடப்பதோ பளுவானவற்றை தூக்குவதோ கூடாது. காரணம், அவ்வாறு செய்வதால் உணவு கீழ்நோக்கி செல்லாமல் மேல்நோக்கி வரும். இதனால் நெஞ்சு எரிச்சல் வாயு தொல்லைகள் ஏற்படும்.

## குடும்பத்தின் நிதி நிலைமை சீரழிய காரணங்கள்

கடந்த 10 ஆண்டுகளில், ஒரு குடும்பத்தின் நிதி நிலைமை சீரழிவதற்கான மிக முதன்மையான பத்துக் காரணங்கள்:

1. குடும்பத்தில் உள்ள அனைவரின் கைகளில் தவழும் தொடுதிரைக் கைபேசிகள்
2. சமூக மதிப்பிற்காக மேற்கொள்ளப்படும் விடுமுறை சுற்றுலாக்கள்.
3. வாகனங்கள் மற்றும் மின்னணுப் பொருட்கள் சமூக மதிப்பின் அடையாளமாக மாறிப்போனது.
4. வீட்டில் சமைக்கப்பட்ட உணவைத் தவிர்த்து, வார இறுதி மற்றும் பிற நாட்களிலும் தேவையில்லாமல் வெளியே சாப்பிடுவதை முதன்மையாகவும், உயர்வாகவும், மகிழ்ச்சியாகவும், தங்கள் மேன்மையைப் பறைசாற்றும் வடிகாலாகவும் நினைக்கத் தொடங்கியது.
5. சீரழிந்த வாழ்க்கைமுறை மருத்துவச் செலவுகளை அதிகரிக்கச் செய்வது.
6. சலூன்கள், பார்லர்கள் மற்றும் ஆடைகளை சமூக மதிப்பிற்கான பெரு நிறுவன தயாரிப்பினைக் (BRAND VALUE) குறியீட்டு உணர்வாக வளர்த்துக் கொண்டது.
7. ஒன்றாக நேரத்தைச் செலவழிப்பதை விட, அதிகப் பணத்தைப் பிறந்தநாள் மற்றும் ஆண்டுவிழாவை சிறப்பாக்க செலவழிப்பதன் மூலம்.
8. பிரமாண்டத் திருமணங்கள் மற்றும் குடும்ப விழாக்கள்
9. வணிகமயமாக்கப்பட்ட உணவுகள், மருத்துவமனைகள், பள்ளிகள், பயிற்சிகள் மற்றும் கல்வி போன்றவற்றினால்
10. தங்கள் வருமானத்தில் அனுபவிக்க இயலாததைக் குறித்த காலத்தில் குறைந்த காலத்தில் அடைந்துவிட கடன் மற்றும் கடன் அட்டைகள் இன்றியமையாததாக மாறிவிட்டதால்...

நமது தேவைகளையும் வருமானத்தையும் புரிந்து கொள்ளாமல் மற்றவர்களின் வாழ்க்கை முறையை நகலெடுக்கிறோம்.

இது குறைக்கப்படாவிட்டால், அது பல ஆண்டுகள் கடந்தும் (பழக்கங்கள் மாறாததால்) நோயாக மாறி அதிக மன அழுத்தம் மற்றும் பதட்டத்திற்கு வழிவகுக்கும். **கவனம் தேவை!**

---

## Tips for functioning as Teams

1. Value every member.
2. Affirm each other.
3. Know your role and don't try to do others' role.
4. Submit to authority and trust God.
5. Speak the truth in love.
6. Defend one another.
7. Be clear on the vision and support it.
8. Don't talk about others behind their back.
9. Believe the best in others and give them the benefit of the doubt.





# எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புத்தகம்

## புத்தக அறிமுகம்


**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University


**எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புத்தகம்:**

பெரிய தீர்க்கதரிசிகள் நான்குபேரில் எசேக்கியேலும் ஒருவன். எசேக்கியேல் இப்புத்தகத்தை கி.மு 570ல் எழுதினான். எசேக்கியேல் புஸ்தகத்தை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்: முதல் 24 அதிகாரங்களும் கிமு 586-ல் எருசலேம் அழிக்கப்படுவதற்கு முன் நடந்த விபரங்களைப் பற்றியும், 25-48 அதிகாரங்கள் அதற்குப்பின்பு நடக்கப்போகிற காரியங்களைப் பற்றியும் விவரிக்கின்றன.

**எசேக்கியேல் புஸ்தகப் பின்னணி:**

எசேக்கியேல் புஸ்தகத்தை சரியாக விளங்கிக்கொள்ள கீழ்க்காணும் பின்னணியங்களை தெரிந்துகொள்வது அவசியம். யூதாவின் பாவங்களினிமித்தம் பாபிலோனியர் யூதாவின்மேல் படையெடுத்துவந்து தேவாலயத்தையும், எருசலேமையும் அழித்து ஜனங்களை சிறைக்கைதிகளாக பாபிலோனுக்குக் கொண்டு சென்றனர். இந்த படையெடுப்பு மூன்று வெவ்வேறு காலக்கட்டங்களில் நடந்தது.

**பாபிலோனியப் படையெடுப்புகளின் விபரம்:**

- **முதலாம் படையெடுப்பு, கிமு 606:** இதில் யோயாக்கீன் அரசனும், தானியேல், சாத்ராக். மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோருடன் ஏராளம் மக்களும் சிறைபிடித்துச் செல்லப்பட்டனர் (2 இரா.24:1-5; 2 நாளா. 36:5-8).
- **இரண்டாம் படையெடுப்பு, கிமு 597:** இதில் யோயாக்கீன் அரசனும், எசேக்கியேல் தீர்க்கதரிசியும், அவர்களுடன் 10,000 (பத்தாயிரம்) பேரும் சிறையாகச் சென்றனர் (2 இரா. 24:8-14; 2 நாளா. 36:9-10).
- **மூன்றாம் படையெடுப்பு, கிமு 586:** இதில் யூதாவில் எஞ்சியிருந்த ஜனங்களையும், சிதேக்கியா அரசனையும் சிறையாகச் கொண்டு சென்றனர். எரேமியா தீரிக்கதரிசியை எஞ்சியிருந்த சிலர் எகிப்துக்கு அழைத்துச் சென்றுவிட்டனர்.

சாலொமோன் கட்டிய தேவாலயம் தீக்கிரையாக்கப்பட்டது. எருசலேமின் மதில்கள் இடிக்கப்பட்டன. தேவாலயப் பொக்கிஷங்கள் பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டன. பட்டயத்துக்குத் தப்பினவர்கள் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு செல்லப்பட்டனர் (2 இரா. 25:1-7; 2 நாளா.36:11-20).

**எசேக்கியேல் தீர்க்கதரிசியின் வாழ்க்கை:**

இவன் பூசி என்னும் ஆசாரியனுடைய மகன். திருமணமானவன். கிமு 597ல் நேபுகாத்நேச்சாரின் இரண்டாவது படையெடுப்பில் பாபிலோனுக்குச் சென்றான். பாபிலோனில் கேபார் நதியண்டையில் குடியிருந்த காலத்தில் தனது 30-ம் வயதில், கிமு 593-ல் ஊழிய அழைப்பைப் பெற்றான், (எசே.1:1-2). இவன் பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டபோது இவனது மனைவி எருசலேமில்

தனித்துவிடப்பட்டாள். இவன் பழைய ஏற்பாட்டின் மிக இருண்ட காலத்தில் பாபிலோனில் சிறைப்பட்டவர்கள் நடுவில் இருந்துகொண்டு ஊழியம் செய்தான்.

**எசேக்கியேல் தீர்க்கதரிசியின் வித்தியாசமான ஊழிய அழைப்பு:**

கிமு 593-ல் தான் அழைக்கப்பட்டது முதல் கிமு 586-ல் எருசலேம் அழிக்கப்பட்டது வரை அவன் வாய் பேசாதவனாய் இருந்தான்: மௌனமாய் இருக்கக் கட்டளைப் பெற்றான்; கர்த்தருடைய 'திருவாக்கு' தனக்குக் கிடைத்தபோது வாய்திறந்து பேசினான்; தரிசனங்களைக் கண்டு வாய்திறந்து அதை மூப்பர்களுக்கு அறிவித்தான். மற்றபடி வாய்திறவாமல் நாடகச் செய்திகள் மூலம் (Signs) செயல்முறைச் செய்திகளாகச் செய்து காட்டினான்.

இந்த விபரங்களைக் கீழ்க்காணும் வசனங்களில் வாசித்துப்பாருங்கள்:

"நான் உன் நாவை உன் மேல்வாயோடே ஒட்டிக்கொள்ளப்பண்ணுவேன்; நீ அவர்களைக் கடிந்துகொள்ளுகிற மனுஷனாயிராமல், ஊமையனாயிருப்பாய்; அவர்கள் கலகவீட்டார்.

நான் உன்னோடே பேசும்போது, உன் வாயைத் திறப்பேன்; அப்பொழுது கர்த்தராகிய ஆண்டவர் இன்னின்னதை உரைத்தார் என்று அவர்களோடே சொல்வாய்; கேட்கிறவன் கேட்கட்டும், கேளாதவன் கேளாதிருக்கட்டும்; அவர்கள் கலகவீட்டார்" (எசே. 3:26,27).

எருசலேமின் அழிவுக்குப்பின்பு அவன் மவுனமாயிருக்கவில்லை.

தானியேலும் எசேக்கியேலும் பாபிலோனிலிருந்த காலத்தில் எரேமியா யூதாவில் ஊழியம் செய்தான். யூதாவுக்குக் கர்த்தரின் நியாயத்தீர்ப்பின் தண்டனை உண்டு என்பது இவனுடைய செய்தியாயிருந்தது. தானியேல் சிறைப்பட்ட யூதாவின் ஜனங்களுக்கு அரசாங்க காரியங்களில் உதவி செய்தான்.

**எசேக்கியேலின் தீர்க்கதரிசனச் செய்திகள்:**

இவன் கிமு 593-ல் ஊழிய அழைப்பைப் பெற்றது முதல் இரண்டு பிரதானச் செய்திகளைக் கொடுத்தான்:

- கிமு 586-ல் எருசலேம் அழிக்கப்படுவதுவரை "எருசலேம் அழிக்கப்படும்" என்ற செய்தியைக் கொடுத்தான். எனவே இதனை அழிவின் செய்தி எனலாம்.
- "எருசலேம் கட்டமைக்கப்பட்டு மறுசீரமைக்கப்படும்" என்ற நம்பிக்கையின் செய்தியை கிமு 585 முதல் 570 வரை கொடுத்தான்.

மேற்கண்ட இரண்டு செய்திகளையும் மூன்று விதங்களில் கொடுத்தான்.

- தரிசனங்களும், செய்திகளும், (Visions)
- அடையாளங்களான நாடகச் செய்திகள் அல்லது செயல்முறைச் செய்திகள், (Signs)
- தேவனுடைய திருவாக்குச் செய்திகள், (Oracles)

எசேக்கியேல் தீர்க்கதரிசியின் 48 அதிகாரங்களையுமே இவ்விதம் பகுத்துப் பார்க்கலாம்.

**I.தரிசனச் செய்திகள் (Visions):** மொத்தம் நான்கு தரிசனங்களைக் கண்டான்.

- முதல் தரிசனம் 1-3 அதிகாரங்கள்
- இரண்டாம் தரிசனம் 8-11 அதிகாரங்கள்
- மூன்றாம் தரிசனம் 37:1-14
- நான்காம் தரிசனம் 40-48 அதிகாரங்கள்

**முதல் தரிசனம்:** தமது சிம்மாசனத்தில் தேவன் அமர்ந்திருக்கிறார். எசேக்கியேலோ சிறைப்பட்டவர்களுடன் பாபிலோனிய கேபார் நதியண்டையில் துக்கத்துடனிருக்கையில் இந்தத் தரிசனம் கொடுக்கப்பட்டது. அத்துடன் ஊழிய அழைப்பையும் பெற்றான். நமது ஆண்டவரே முழு உலகத்துக்கும் தேவனாய் இருக்கிறார் என்பதை இத்தரிசனம் நமக்குக் காட்டுகிறது. சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு ஊழியம் செய்யும் பிரதான ஜீவன்களை எசேக்கியேலுக்குக் கர்த்தர் காண்பித்தார். அவை கர்த்தருக்கு ஊழியம் செய்பவைகளே அவைகளுக்கு மேலாக எஜமானனாக தேவன் காட்சியளிக்கின்றார்.

பாபிலோனில் கிமு 900க்கும் 800க்கும் இடைப்பட்ட காலத்திலுள்ள கல்வெட்டுகள் ஏராளம் காணப்பட்டன. அவை கர்த்தருக்குப் பணிவிடை செய்கிற இந்த ஜீவன்களுக்கு ஒப்பானவையாயிருந்தன. பாபிலோனியர் இந்த ஜீவன்களின் கல்வெட்டுகளைத்தான் தங்களது தெய்வங்களாக வணங்கினர்.

கர்த்தர் எசேக்கியேலுக்குச் சொன்ன செய்தி என்னவெனில், நீ கண்ட தரிசனத்தில் கண்ட ஜீவன்களெல்லாம் எனக்குப் பணிவிடை செய்கின்றன. ஆனால் பாபிலோனியர் அவற்றை சிலைகளாகச் செய்து, அவற்றை தெய்வங்களாக வழிபடுகின்றனர். இந்த ஜீவன்களைக் கர்த்தருடைய ஆவிதான் வழிநடத்தியது. எனவே சிறைப்பட்ட ஜனங்களையும் சர்வ ஆளுகையுள்ள நானே வழிநடத்துகிறேன்' என்று இத்தரிசனங்கள் மூலம் விளக்கம் தந்தார்.

**இரண்டாம் தரிசனம்:** முதலாவது தரிசனத்துக்கு 14 மாதங்களுக்குப்பின்பு இத்தரிசனம் கொடுக்கப்பட்டது. கர்த்தர் எசேக்கியேலை மறுரூபப்படுத்தி எருசலேமுக்குக் கொண்டு சென்றார். கிமு 606, கிமு 597 ஆகிய இரண்டு காலக்கட்டங்களில் பெரும்பாலான யூதா ஜனங்கள் சிறைப்பிடிக்கப்பட்டு பாபிலோனுக்கு வந்துவிட்டாலும், எருசலேமிலோ ஜனங்கள் இன்னும் விக்கிரக ஆராதனை செய்வதை எசேக்கியேலுக்குக் காண்பித்தார். எருசலேம் "எரிச்சலூட்டுகிற ஸ்தலமாகக் காணப்பட்டது" (8:3) ஊரும் பிராணிகள், அருவருப்பான மிருகங்கள், நரகலான விக்கிரகங்கள், இடையர்கள் செழிப்புக்காக வணங்கிவந்த தம்மூஸ்-க்கு செய்யப்பட்ட ஆராதனை (8:16) ஆகியவற்றைக் கண்ட எசேக்கியேல் தேவ மகிமை தேவாலயத்தைவிட்டு எடுபட்டுப்போவதையும் கண்டான். எருசலேமுக்காக பெருமூச்சுவிட்டு அழுகிற ஜனங்கள் மேல் அடையாளம் போடப்படுவதையும் இத்தரிசனத்தில் கண்டான், (9:14).

இந்த தரிசனங்களைக் கண்டபின்பு எசேக்கியேல் ஆவியானவரால் திரும்பவும் பாபிலோனுக்குக் கொண்டுவரப்பட்டான்.

**மூன்றாம் தரிசனம்: 37:1-14:**இது எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கில் நடந்த விபரங்களடங்கிய தரிசனம்.

இத்தரிசனத்தில் கர்த்தர் அவனை ஆவிக்குள்ளாக்கி வெளியே கொண்டுபோய், எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்தி, முற்றிலும் உலர்ந்துபோன அந்த எலும்புகள் உயிரடையும்படி அவைகளுக்குப் பிரசங்கம் செய்யச் சொன்னார். இதன் பொருள் என்னவெனில், இஸ்ரவேல் ஜனங்கள் ஆவிக்குரிய நிலையில் செத்து, உலர்ந்துபோன எலும்புகளாகக் காணப்பட்டனர்; தம்மூஸ்-ஐ வணங்கிக் கெட்டுப்போன இந்த எலும்புகள் உயிரடையும் எனவும் அவைகளுக்குப் பிரசங்கம்பண்ணும்போது, அவைகளின்மேல் பரிசுத்தாவியின் வல்லமை வந்து அவைகளை உயிரடையச் செய்யும் என்றும் சொன்னார் (37:4,9,12). செத்துப்போன தேசம் உயிரடைந்து மறுசீரமைக்கப்படும் என்ற செய்தியைக் கொடுக்கவே இத்தரிசனம் கொடுக்கப்பட்டது.

**நான்காம் தரிசனம்:** (40-48 அதிகாரங்கள்).

இரண்டாம் தரிசனத்தில் (8-11 அதிகாரங்களில்) எருசலேமைவிட்டு எடுபட்டுப்போன தேவனுடைய மகிமை, 40-48 அதிகாரங்களில் கொடுக்கப்பட்ட இந்த தரிசனத்தில் மறுபடியும் தேவாலயத்தில் வந்து இறங்கிற்று. அதன்பின்பு என்னென்ன நடந்தன என்பதை விவரிப்பதே இந்தத் தரிசனம்: தேவாலயம் திரும்பவும் கட்டப்படுதல், தேவாலயத்தின் அமைப்பு (40:1-44:3), தேவாலயத்தின் காரியங்கள் எப்படிச் செய்யப்படும் என்ற விபரங்கள் (44:4-46:24), இஸ்ரவேல் தேசத்தின் மிக ஆசீர்வாதமான எதிர்காலம் (47, 48 அதி) ஆகியவற்றை இந்த 4ம் தரிசனத்தில் காண்கிறோம்.

## II.நாடக, செயல்முறைச் செய்திகள் (Signs)

மவுனமாயிருக்கக் கட்டளைபெற்ற எசேக்கியேல், 12 நாடகச் செய்திகளைச் செய்து கர்த்தருடைய செயல்களை விவரித்தான்.

1. எருசலேமும் அதைச் சுற்றிலும் உள்ள பட்டணங்களும் அழிக்கப்படும், (4:1-2). வரைபடமாக எருசலேம் நகரம் ஒரு செங்கலில் வரையப்பட்டு, மதிலிடிக்கும் எந்திரங்களால் அது இடிக்கப்படுவது போன்ற செயல்முறைச் செய்தி.
2. 4:3 எருசலேம் முற்றிகைப்போடப்படும் என்பதற்கு அடையாளமாக, ஒரு இருப்புச்சட்டியை அவனுக்கும் எருசலேம் நகரத்துக்கும் இடையே இருப்புச் சுவராக்கி தன் முகத்தை அதற்கு நேராகத் திருப்புதல்.
3. எசேக்கியேல் ஒருபுறமாய் ஒருக்களித்துப்படுத்தல். இஸ்ரவேலரின் பாவத்தை தன்மீது சுமத்திக்கொள்ளுவதற்கான செய்தி, (4:4-6).
4. 4:9-11: தேசம் முற்றுகையிடப்பட்டு, தேசத்தில் பஞ்சம் வரும் என்பதனைக் காட்டுவதற்கான நாடகச் செய்தி: கோதுமை, வாற்கோதுமை, பெரும்பயிறு, சிறுபயிறு, தினை, கம்பு ஆகியவற்றை சேர்த்து அப்பஞ்சுட்டு 390 நாட்கள் எடுத்துச் சாப்பிடுவது போன்ற காட்சி. பஞ்சம் பெருகும்போது முதற்தரமான கோதுமை குறைவுபடும்; அடுத்த தரமான வாற்கோதுமையும் இல்லாமற்போகும். இப்படியே தகுதிவாரியாக எல்லா தானியங்களும் குறைந்துபோகும் நிலையில் பஞ்சம் பெருகும் என்பதை இச்செயல்முறைக் காட்டிற்று.
5. 4:12-15: தேசம் முற்றுகையிடப்படும் பஞ்சகாலத்தில் விறகுகூட கிடைக்காமல் ‘மனித கஷ்டத்தின் வரட்டி’யைக்கொண்டு சமைத்துச் சாப்பிட கட்டளை பெறுதல்.
6. 5:1-4: சவரகன் கத்தியால் தனது தலைமயிரைச் சிரைத்து, அதை மூன்று பங்காகப்பிரித்து, ஒரு பங்கை அக்கினியால் சுட்டெரிக்கவும், இரண்டாம் பங்கை சுற்றிலும் கத்தியால் வெட்டவும், மூன்றாம் பங்கை காற்றிலே தூற்றவும் கட்டளை பெற்றான். இஸ்ரவேலரில் ஒருபங்கு அக்கினியால் அழியும், அடுத்தப்பங்கு பட்டயத்தால் வெட்டுறும், மீதியானவர்கள் சிதறடிக்கப்படுவர்கள் என்பதே இந்த நாடகச் செய்தியின் விளக்கம்.
7. 12:1-20: இஸ்ரவேலர் சிறையாகக் கொண்டு செல்லப்படுவர் என்பதற்கு அடையாளமாக எசேக்கியேல் பரதேசம்போவதுபோல (சிறையிருப்பில் செல்வதுபோல) வீட்டின் சுவரிலே துவாரமிட்டு வெளியே வந்து பயணப்படுவதுபோல செயல்முறைச் செய்தி.
8. 21:1-14: இடுப்பு நொறுங்கும்படி பெருமூச்சுவிடுதல், பட்டணத்துக்கு விரோதமாக தனது முகத்தைத் திருப்புதல், ஓலமிட்டு அலறுதல், கையோடு கைகொட்டுதல் (21:2,6,12,14) போன்ற செயல்முறைச் செய்திகள் சிறையிருப்பு வரும்போது நடக்கும் அவலநிலைகளேயாகும். அவை, துர்ச்செய்தி வருவதையும், அழிவு நெருங்குவதையும் காட்டும் செய்திகள்.
9. 24:15-27: எசேக்கியேலின் மனைவியின் மரணச்செய்தி பாபிலோனிலிருந்த அவனுக்குச் சொல்லப்படுகிறது. ஆகிலும் அவன் அதற்காக அழாமலும் புலம்பாமலும் இருக்க வேண்டும். எசேக்கியேலின் மனைவி அவனுடைய கண்களுக்கு இன்பமானவளாயிருந்ததுபோல எருசலேமும் கர்த்தருடைய கண்களுக்கு இன்பமானவளே! (24:16-18). எருசலேம் அழியும்போது தேவன் அதை பாராமுகமாய் ஒப்புக்கொடுப்பது இந்த நாடகச் செய்தியின் பொருளாகும்.
10. 37:15-28: ஒரு கோலை எடுத்து அதிலே இஸ்ரவேல் என எழுதவும், இன்னொரு கோலை எடுத்து அதில் யூதா புத்திரரின் கோல் என எழுதவும், பின்பு இருகோல்களையும் ஒன்றாய்ச் சேர்த்து இசைக்கவும் வேண்டும் எனக் கட்டளை பெற்றான். இஸ்ரவேல் மற்றும் யூதா என பிரிந்து சென்றுவிட்ட (1இரா 12) இரு தேசங்களையும் தேவன் ஒன்றாய் இணைப்பார் என்பதே இந்த செயல்முறை

செய்தியின் விளக்கம்.

**III.திருவாக்குச் செய்திகள்:**

6:1-14;7:1-27;20:1-49;21:13-24:14 மற்றும் அதி.25-அதி.36;38,39ம் அதிகாரங்களில் தரிசனங்களுக்கும், செயல்முறைச் செய்திகளுக்கும் எசேக்கியேல் விளக்கங்களைத் தருகிறான். அவற்றையே "திருவாக்குகள்" என வகைப்படுத்து கிறோம்.

**ஏழு புறஜாதிய தேசங்களுக்கு எதிரான திருவாக்குகள்:**

அம்மோனுக்கு எதிரானவை, 25:1-7; மோவாபுக்கு எதிரானவை, 25:8-11; ஏதோமுக்கு எதிரானவை, 25: 12-14; பெலிஸ்தியாவுக்கு எதிரானவை, 25:15-17; தீருவுக்கு விரோதமானவை, 26:1-28:19; சீதோனுக்கு எதிரானவை, 28:20-24; எகிப்துக்கு விரோதமானவை 29-32

யூதா தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்து தண்டனை பெற்றாலும், தேவன் அவர்களுடன் உடன்படிக்கை செய்திருந்தார். எனவே அவர்களுக்கு எதிராக எழும்பிவந்த மேற்கண்ட ஏழு புறஜாதிய தேசங்கள்மேல் நான் என்னுடைய நியாயத்தீர்ப்பை அனுப்புவேன் என்று தேவன் தீர்க்கதரிசியின் மூலமாக அறிவித்தார்.

**எசேக்கியேல் புஸ்தகத்தின் பொருளடக்கம்:**

**1. தீர்க்கதரிசியின் அழைப்பு, 1-3 அதி.**

- தேவனுடைய மகிமையைக் காணுதல், அதி 1.
- தேவனுடைய சத்தத்தைக் கேட்டல், அதி 2
- தேவனுடைய காவலனாக ஏற்படுத்தப்படுதல், அதி 3

**2. எருசலேமின் வீழ்ச்சி, 4-24 அதி.**

- நியாயத்தீர்ப்பு அறிவிக்கப்படல், அதி 4-7
- தேவமகிமை எருசலேமை விட்டு விலகுதல், அதி 8-11
- தேவனில்லாத தலைவர்கள், அதி 12-17
- தேவ நியாயத்தீர்ப்பு உறுதிப்படல், அதி 18-21
- பரிசுத்த நகரத்தின் அழிவும் முடிவும், அதி 22-24

**3. புறஜாதிய தேசங்கள் மேல் வரும் நியாயத்தீர்ப்பு, அதி 25-32**


**4. எருசலேமின் மகிமையான எதிர்காலம், அதி 33-48**

- எருசலேம் நகரம் மறுசீரமைக்கப்படுதல், அதி 33, 34
- இஸ்ரவேல் தேசம் புதுப்பிக்கப்படுதல், அதி 35-36
- இஸ்ரவேல் தேசம் உயிர்பெற்று ஒன்றாக இணைதல், அதி 37-39
- தேவாலயமும் ஆசாரிய ஊழியமும் திரும்பவும் ஸ்தாபிக்கப்படுதல், அதி 40-48

"தேவன் பரிசுத்தமுள்ளவர்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது. அவருடைய மகிமை நம்மிடத்தில் தங்கும்படி பயபக்தியுடன் இருக்கவேண்டும்" என்பதே இப்புத்தகத்தின் கருப்பொருளாகும்.

"நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்" (6:7) என்பது இப்புத்தகத்தின் திறவுகோல் வசனம் ஆகும்; இது '70' தடவை இப்புத்தகத்தில் வருகிறது.

துயரமுள்ள கடினமான ஊழியப்பாதை எசேக்கியேலுக்குத் தரப்பட்டது. ஆலயத்தில் ஆசாரிய ஊழியம் செய்ய வேண்டிய அவன் அந்நிய தேசத்தில் ஆற்றங்கரைக் குடியிருப்பில் தனது மனைவியிடமிருந்து பிரிக்கப்பட்டு சிறைப்பட்டவர்கள் நடுவில் இருக்கையில் அங்கும் அவனைக் கண்டெடுத்து தமது திட்டத்தை அவன்மூலம் செய்து முடித்த தேவனின் அற்புதமான வழிநடத்துதல், அருமை, அருமையிலும் அருமை. மேலே தரப்பட்டுள்ள அறிமுக வார்த்தைகளுடன், எசேக்கியேல் புத்தகத்தையும் வாசித்து பயனடைய கர்த்தர் நமக்குக் கிருபை தருவாராக!



## REGULAR FULL TIME COURSES

## முழு நேர பயிற்சி வகுப்புகள்

முழு நேர ஊழியத்திற்கு அர்ப்பணித்திருக்கும்
சகோதரர்களுக்கு

**போதனை மொழி : தமிழ்**

- இறையியல் முதுகலை பட்டம்
  (Master of Divinity (ATA)
  தகுதி : இளங்கலை பட்டம்; காலம்:3 ஆண்டுகள்
- இறையியல் பட்டப்படிப்பு
  (Bachelor of Theology (ATA)
  தகுதி : 12–ம் வகுப்பு; காலம்: 3 ஆண்டுகள்
- இறையியல் டிப்ளோமா
  (Diploma in Theology (ATA)
  தகுதி : 10–ம் வகுப்பு; காலம் : 3 ஆண்டுகள்
- இறையியல் சான்றிதழ்
  (Certificate in Theology (ATA)
  தகுதி : 10–ம் வகுப்பு கீழ்; காலம்: 2 ஆண்டுகள்

# முறையான வேதாகம கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு

## EVENING PART TIME COURSES

## பகுதி நேர பயிற்சி வகுப்புகள்

For Both Men and Women

Classes: Monday, Thursday & Friday | 6:30 – 8:30 Pm

**போதனை மொழி: தமிழ் மற்றும் ஆங்கிலம்**

- MASTER OF ARTS IN CHRISTIAN MINISTRY (ATA)
  Eligibility: Any Degree | Duration: Two Years
  Medium of Instruction: English
- கிறிஸ்தவ ஊழியம் – முதுகலை (ATA)
  தகுதி: பட்டபடிப்பு காலம்: 2 ஆண்டுகள்

**ADMISSION OPEN**

## EVENING PART-TIME ONLINE COURSE

## மாலை பகுதி நேர ஆன்லைன் வகுப்பு

- கிறிஸ்தவ ஊழியம் – டிப்ளோமா
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்

For further information and application form, please contact
Rev. M. Sampath (Principal, MABC)
Mobile : +91 - 94442 87322

MADRAS ASSEMBLIES OF GOD BIBLE COLLEGE

No. 191 (New No. 6), Anna Salai,
Little Mount, Chennai – 600 015, TN.
Phone: 044 – 2235 1646 | 2235 3100
Email: mabc_edu@yahoo.com



# மூழ்கு ஞானஸ்நானம் சடங்காச்சாரமா? இரட்சண்ய சேனையின் பிழை!


Rev.R.மதன்ராஜ்

ஆசிரியர், மெட்ராஸ் ஏ.ஜி. வேதாகமக் கல்லூரி

Contributing Editor, Paripoorana Jeevan


இரட்சண்ய சேனை (Salvation Army) இயக்கமானது இங்கிலாந்து தேசத்தில் வில்லியம் பூத் என்பவரால் 1865ஆம் ஆண்டு துவங்கியது. வில்லியம் பூத்தின் வாழ்க்கையில் வைராக்கியத்தையும் சுவிசேஷ தாகத்தையும் எவரும் சாட்சியிடலாம். இவர் தன் மனைவி கேத்ரினுடன் இணைந்து தன் தேசத்தில் இருக்கும் ஏழை எளிய மக்களுக்கு அதிகமாய் உதவிகள் செய்தார். அதின் விளைவாய் தோன்றியதே இரட்சண்ய சேனை இயக்கம். இன்று வரை இங்கிலாந்து தேசத்தில் மட்டுமல்லாது, உலகத்தின் பல நாடுகளிலும் இந்த இயக்கம் பரவியிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த இயக்கத்தின் பெயருக்கு ஏற்றாற்போல இவர்கள் தங்களை ஒரு சேனையாகக் கருதிக்கொள்வது மட்டுமின்றி, இராணுவ வீரர்களை போல ஆடை அணிந்துகொள்வதும் இவர்களின் வழக்கம். சமுதாய நற்பணிகளில் அதிகமாய் ஈடுபட்டு மக்களின் தேவைகளை அதிகமாய் சந்திக்கும் இந்த இயக்கமானது, கிறிஸ்தவத்தின் முக்கிய சடங்காச்சாரங்களான ஞானஸ் நானத்தையும் திருவிருந்து பந்தியையும் அநுசரிப்பதில்லை; அவைகள் வெறும் சடங்காச்சாரங்கள் என்பதினால் அவற்றை அநுசரிப்பதில் எந்த பிரயோஜனமும் இல்லை என்று அவற்றை முற்றிலும் நிராகரிக்கின்றது. அதற்கு மாற்றாக சில காரியங்களை அவர்கள் அறிமுகப்படுத்திக் கொண்டு தங்களுடைய தவறை நியாயப்படுத்திக் கொள்கின்றனர். கிறிஸ்தவத்தின் முக்கிய சடங்காச்சாரங்களாய் கருதப்படும் ஞானஸ்நானத்தையும் திருவிருந்து பந்தியையும் இவர்கள் புறக்கணிப்பது முற்றிலும் தவறு. இன்று இருக்கும் பல முன்னணி கிறிஸ்தவ ஸ்தாபனங்களைக் காட்டிலும் சமுதாய நற்பணிகளில் அதிகமாய் ஈடுபட்டு கிறிஸ்தவ அன்பை கிரியையின் மூலமாய் வெளிப்படுத்தும் இரட்சண்ய சேனை இயக்கமானது, வேதத்தின் கட்டளையை புறக்கணிப்பது ஏன் என்னும் கேள்வி எழும்புகிறது.

ஞானஸ்நானம் இரட்சிப்பின் அத்தியாவசியமான தேவையா? ஞானஸ்நானம் என்பது இரட்சிப்பின் பாதையில் ஒரு அங்கம். அது ஒருவருக்கு இரட்சிப்பைக் கொடுப்பதில்லை. மாறாக, ஞானஸ்நானம் கீழ்ப்படிதலின் முக்கியமான சடங்காச்சார ரீதியான பிரதிபலிப்பு. ஞானஸ்நானம் எடுப்பதின் மூலம் ஒருவர் பரிசுத்தவானாகிறதில்லை. “உறைந்த பாவியாய் ஞானஸ்நான தொட்டிக்குள் செல்கிறோம்; நனைந்த பாவியாய் வெளியே வருகிறோம்” என்று ஒரு பிரசங்கியார் சொல்கிறார். அது ஒருவிதத்தில் உண்மையே. ஞானஸ்நானம் ஒருவனை நீதிமானாய் மாற்றுவதில்லை. ஆனால் ஒருவர் சபையாருக்கு முன்னிலையில் ஞானஸ்நானம் எடுக்கும்போது, அந்த சபை ஐக்கியத்தில் இணைந்து தேவனுடைய இராஜ்யத்தின் சேவையில் தங்களை அர்ப்பணிக்கின்றனர் என்பதை பகிரங்கமாய் வெளிப்படுத்துகின்றனர்.

அப்போஸ்தலர் 2:38-ல் பேதுரு, “நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்” என்று அறிவுறுத்துகிறார். இங்கு பேதுரு ஞானஸ்நானத்தை பாவமன்னிப்பிற்கான நிபந்தனையாய் முன்வைக்கிறார். பேதுருவின் இந்த வார்த்தைகளை பைப்பர் ஒரு

எளிய உதாரணம் கொண்டு விளக்குகிறார். ஒருவர் ரயில் புறப்படும் கடைசி நேரத்தில், அதைப் பிடிக்க ஓடுகிறார். அவருடைய அருகாமையிலிருக்கும் ஒரு முதியவர் "உன்னுடைய தொப்பியை உறுதியாய் பிடித்துக்கொண்டு, வேகமாய் ஓடு" என்று அறிவுறுத்துகிறார். அவர் தொப்பியை உறுதியாய் பிடித்துக்கொண்டதினால் ரயிலைப் பிடிக்கவில்லை. மாறாக, அவர் வேகமாய் ஓடினதினால்தான் ரயிலைப் பிடித்தார். ரயிலைப் பிடிப்பதற்கு வேகமாய் ஓடுவது மட்டும் போதுமானது என்ற போதில், ஏன் தொப்பியைப் பிடித்துக்கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தப்பட்டார்? இதற்கான பதில் நமக்கு தெரிந்ததே. வேகமாய் ஓடும்போது எதிர்காற்றில் தொப்பி பறந்துவிடும். அது அவனுடைய ஓட்டத்தின் வேகத்தைக் குறைத்து, அவனுடைய கவனத்தை திசைதிருப்பக்கூடும். அதினால் அவன் வேகம் தடைபட்டு, ரயிலை தவறவிடும் அபாயம் ஏற்படலாம். எனவே தொப்பியை பிடித்துக்கொண்டு ஓடுமாறு அறிவுறுத்தப்படுகிறார். பேதுரு கூறும் ஞானஸ்நானம் இந்த தொப்பிக்கு ஒப்பிடப்படுகிறது. ஞானஸ்நானத்தினால் ஒருவர் பரலோகம் செல்வதில்லை. ஆனால் நீதியின் பாதையில் ஓடும் ஒருவருடைய ஓட்டத்திற்கு இந்த சடங்காச்சார ரீதியான கீழ்ப்படிதல் அவசியமாகிறது. எனவே அதை சடங்காச்சாரம் என்று நிர்விசாரமாய் தவிர்க்காமல், அதை விசுவாச ஓட்டத்தின் முக்கிய அங்கமாய் கருதி ஓடவேண்டியது நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது.

ஞானஸ்நானத்தை தவிர்க்கும் போதனையாளர்கள், இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட கள்ளன் சம்பவத்தை அதிகமாய் மேற்கோள் காண்பித்து, அவன் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாமல் பரலோகம் பிரவேசிக்கவில்லையா? என்று கேள்வியெழுப்புகின்றனர். சிலுவையில் அறையப்பட்ட கள்ளன் சம்பவம் ஒரு விதிவிலக்கு; ஞானஸ்நான உபதேசத்திற்கு நேரடியாய் பொருந்தக்கூடிய ஒன்று அல்ல. எனவே அந்த சம்பவத்தை உபதேசத்தின் அடிப்படையாய் வைத்து ஞானஸ்நானத்தை தவிர்ப்பது முறையல்ல. வேதத்தில் பரவலாய் பகிரப்படாத ஒரு சத்தியத்தை உபதேசமாக்குவது தவறு.

கொலோசெயர் 2:12இல் பவுல், ''ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்'' என்று சொல்லுகிறார். தண்ணீருக்குள் செல்லுவதை அடக்கம்பண்ணப்படுவதற்கும், தண்ணீரிலிருந்து வெளியே வருவதை உயிர்த்தெழுவதற்கும் ஒப்புமையாக்குகிறார். ஆனால் இதை செய்வதினால் ஒருவன் தேவனோடு இணைக்கப்படுவதில்லை; மாறாக, "தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே'' அவன் தேவனோடு இணைகிறான் என்று கூறுவதைப் பார்க்கமுடியும். ஆகவே பவுலின் கூற்றுப்படி, ஞானஸ்நானம் என்பது உள்ளான விசுவாசத்தின் வெளியரங்கமான பிரதிபலிப்பு.

1 பேதுரு 3:21-ல் பேதுரு, "அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" என்று கூறுகிறார். தண்ணீர் மாம்ச அழுக்கை நீக்கி சுத்திகரிக்கின்ற ஒன்று. ஆகையால் தண்ணீர் ஒருவருடைய பாவத்தை சுத்திகரிப்பதில்லை; மாறாக, தண்ணீர் ஞானஸ்நானம் ஒரு ஒப்பனையாய் இருக்கிறது என்று கூறுகிறார். அது "தேவனைப் பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கையாய்" செயல்பட்டு, விசுவாசத்தின் மூலம் இரட்சிப்பை அடைவதற்கு காரணியாய் அமைகிறது. ஞானஸ்நானம் எடுப்பதின் மூலமாய் இரட்சிப்பு என்று வெளிப்படையாய் பேதுரு சொல்லுவதுபோல் தெரிந்தாலும், ஞானஸ்நானம் முழுமையான மனமாற்றத்தின் காணக்கூடிய மாம்ச ரீதியான ஒப்பனையாகவே இங்ஙனம் அறிவிக்கப்படுகிறது.

வேதம் ஞானஸ்நானத்தை கட்டளையாய் கொடுத்திருக்கிறது. இயேசு பரமேறியபோது கொடுத்த பிரதான கட்டளையில் ஞானஸ்நானம் முக்கிய பங்கு வகிக்கிறது. மத்தேயு 28:18-20இல் "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்".

கர்த்தருடைய பந்தியை அநுசரிப்பதும், ஞானஸ்நானத்தைப் போன்று திருச்சபைகள் இன்றும் ஆசாரிக்கிற ஆரோக்கியமான மற்றுமொரு சடங்காச்சாரம். "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று இயேசு சீஷர்களுக்குக் கொடுத்த கட்டளையை கைக்கொள்ளுவதின் மூலம் திருச்சபை கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற மரணத்தை நினைவுகூரும் ஆரோக்கியமான ஐக்கியத்தில் ஈடுபடுகிறது. பவுல் அப்போஸ்தலரும், "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:26) என்று அறிவுறுத்துகிறார். கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கும் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தையும், அவருடைய பாடுகளையும், அவருடைய வருகை வரையிலும் நம்புவது மட்டுமல்லாது, அதை மற்றவர்களுக்கும் தெரிவிக்கும் பொறுப்பேற்கிறார்கள். எப்படி ஞானஸ்நானத்தில் தண்ணீருக்கு நம் பாவத்தை கழுவும் வல்லமை இல்லையோ, அதேபோன்று கர்த்தருடைய பந்தியில் நாம் புசித்து குடிக்கும் அப்பத்திற்கும் ரசத்திற்கும் பிரத்யேகமான வல்லமை ஏதுமில்லை என்பது உண்மை. ஆனால் பந்தியில் பங்கேற்கும்போது, தன்னை தான் பரிசோதித்து அறிந்து, பாவ வழியை விட்டு மனந்திரும்பும் வாய்ப்பைப் திருச்சபையினர் ஒவ்வொருவரும் பெறுகின்றனர். "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக் கடவன்" (வச.28). ஆகையால் கர்த்தருடைய பந்தியானது, வெளியரங்கமான சடங்காச்சாரமாய் தெரிந்தாலும், ஒவ்வொரு மனுஷனுடைய ஆவிக்குரிய ரீதியான மாற்றத்திற்கு வழிவகை செய்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை.

பாரம்பரிய திருச்சபைகள் கடைபிடிக்கிற அனைத்து சடங்காச்சாரங்களும் ஆரோக்கியமானது என்று சொல்லிவிடமுடியாது. ஆனால், ஞானஸ்நானமும், கர்த்தருடைய பந்தியும் பகிரங்கமாய் வேதத்தில் கட்டளையிடப்பட்ட அநுசாரங்கள்; ஆரோக்கியமான திருச்சபையின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமானவைகள். இவைகள் வெளியரங்கமாய் நடப்பிக்கப்பட்டாலும், கீழ்ப்படிந்து கடைபிடிக்கிற ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் உள்ளான மாற்றத்தை தீவிரமாய் ஏற்படுத்தி, தேவனுடைய உடன்படிக்கை அன்பில் மரணபரியந்தம் நிலைத்திருக்கச் செய்யும் ஆரோக்கியமான கடிவாளங்கள் என்று சொன்னால் மிகையாகாது.

வேதம் தேவனுடைய வார்த்தை என்பதை தங்களுடைய முதல் உபதேசமாய் அடையாளப்படுத்தும் இரட்சண்ய சேனை உபதேசியர்கள், வேதம் கொடுத்த ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தியைக் குறித்த கட்டளையை மட்டும் நிராகரிப்பது ஏன்? மெய்யான சேனை வீரர்கள் தங்கள் படைத்தளபதியின் கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டாமோ? சடங்காச்சாரங்கள் என்று அதை குறைத்து மதிப்பிடுவது முற்றிலும் தவறு. இயக்கத்தின் பாரம்பரியத்தை காப்பதைக் காட்டிலும், வேதத்தின் கட்டளைக்கு முக்கியத்துவம் கொடுப்பது மிகவும் அவசியமானது.



# ராஜ்யம் கர்த்தருடையதாய் இருக்கும்


**Rev. சாமுவேல் வடிவேல்**

வடகிழக்கு மிஷன் இலாக்கா ஊழியங்கள்


கிறிஸ்துவுக்குள் அன்பான பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் தமிழ்பிரதேச மிஷன் ஊழியங்கள் சார்பாக வாழ்த்துக்கள். இதுவரை மிஷன் ஊழியங்களுக்காய் நீங்கள் கொடுத்து வரும் ஒத்துழைப்பிற்காக நன்றி.

நாம் வாழ்கின்ற இந்த காலத்தில் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மை கொண்டு எதையாவது செய்ய எதிர்பார்த்து ரெகண்டிருக்கிறோம்.

ஒபதியா என்ற புத்தகத்தில் சிறிய தீர்க்கதரிசி கூறும்போது ஒபதியா 1:21-ல் அப்பொழுது ராஜ்யம் கர்த்தருடையதாய் இருக்கும். எப்பொழுது? என்ற கேள்வியோடு தியானத்தில் நன்மை உண்டாகும்.

நம்முடைய ஜெபத்தில் ஒன்று உம்முடைய ராஜ்யம் வருவதாக என்பதே. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரிடமும் அவருடைய ராஜ்யம் இருக்கிறது. ஒபதியா என்ற பெயரின் பொருள் யேகோவாவின் ஊழியன் Servant of Yahweh (Or) யோவோவாவை ஆராதிப்பவன் Worshipper of Yahweh நான் யாரோடு இருக்கிறேன் என்பதே முக்கியம். நாம் அவரோடு இருந்தால் அவர் நம்மோடு இருப்பார்.

நேபுகாத்நேச்சாரால் இஸ்ரவேலர் அடிமையாக கொண்டு செல்லப்பட்டபோது ஏதோமியர் (ஏசாவின் சந்ததியர்) இஸ்ரவேலருக்காக பரிதாபப்படுவதற்கு பதிலாக அவர்களை பிடித்து பாபிலோனியரிடமும் ஒப்படைத்து ஏதோமுக்கு தப்பி வந்தவர்களை கொன்று குவித்தனர். பரிசுத்த பர்வதாமாகிய எருசலேமில் குடித்து கும்மாளமிட்டனர் (ஒபதியா 1:16).

இதினிமித்தம் ஏதோமுக்கு நியாயத்தீர்ப்பு எல்லா ஜாதிகளுக்கும் நியாயத்தீர்ப்பு வந்தது. ஒபதியா புத்தகத்தை முடிக்கும்போது ராஜ்யம் கர்த்தருடையதாய் இருக்கும் என்று கூறினார். நமது ஆண்டவர் சொன்னால் செய்வார். அவர் சொல்ல ஆகும் கட்டளைக்கு நிற்கும்.

எப்பொழுது ராஜ்யம் கர்த்தருடையதாய் மாறும் என்று கவனித்தால்

**1. நாம் பரிசுத்தமாய் இருந்தால்**

ஒபதியா 1:17-ல் ஆனாலும் சீயோன் பர்வதத்திலே தப்பியிருப்பவர் உண்டு அவர்கள் பரிசுத்தமாயிருப்பார்கள். பரிசுத்தமே ஒரு மனிதனை தேவன் பயன்படுத்த எதிர்பார்க்கும் முதல் தேவை. தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாய் இருக்கிறது. நீங்களே அந்த ஆலயம் (1 கொரி. 3:17).

நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே (1 பேதுரு 1:16). இந்த கடைசி நாட்களில் பரிசுத்தத்திற்காய் வைராக்கியம் பாராட்டுவோம்.

1 தெச.4:7,8-ல் தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். ஆகையால், அசட்டைபண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டைபண்ணுகிறான்.

## 2. நாம் நம்மை அறிந்தால்

ஒபதியா 17-ன் பின்பகுதியில் யாக்கோபின் வம்சத்தார் தங்களுடைய சுதந்தரங்களைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். பாவத்தில் இருந்து மீட்கப்பட்ட நாம் நம்முடைய சுதந்திரம் என்ன என்பதை அறிய வேண்டும். யோவான் 1:12,13-ல் அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.

அவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள். (எ.கா) கானானை சுதந்தரிக்க அனுப்பப்பட்ட 12 பேரில் 10 பேர் துர்செய்தி கொண்டுவந்தனார் எண்.13:31-33-ல் காண்கிறோம். ஆனால் யோசுவாவும், காலேபும் விசுவாச அறிக்கை செய்தார்கள் எண்.14:9-ல் வாசிக்கிறோம். எண்.14:9 அவர்களை காத்த நிழல் அவர்களை விட்டு விலகிப்போயிற்று. கர்த்தர் நம்மோடே இருக்கிறார்.

நம்மோடு இருக்கிறவர் யார்? உலகத்தில் இருக்கிறவனிலும், நம்மோடு இருக்கிறவர் பெரியவர். நமக்குள் இருக்கிற பரிசுத்த ஆவியானவர் பலத்த காரியம் செய்வார். தேசம் கர்த்தருடையதாய் மாறும்.

## 3. நாம் அக்கினி ஜுவாலையாய் மாறினால்

ஒபதியா 1:18-ல் வசனத்தில் யாக்கோபு வம்சத்தார் அக்கினியாயும், யோசேப்பின் வம்சத்தார் அக்கினி ஜுவாலையுமாயிருப்பார்கள். நாம் ஆண்டவருக்கு அக்கினியாய் மாறும்போது அப்பொழுது ராஜ்யம் கர்த்தருடையதாய் மாறும்.

## 4. நாம் சுதந்தரிக்கப் புறப்பட்டால்

ஒபதியா 1:19,20 "சுதந்தரிந்து கொள்வார்கள்" என்ற வார்த்தை நான்கு முறை சொல்லப்பட்டுள்ளது. எதை சுதந்தரித்துகொள்வோம். எதிரியின் எல்லையை, ஏசாவின் மலைகளை, பெலிஸ்தியரின் பட்டணம், தென் திசைப்பட்டணம்.

தேசம் சுதந்தரிக்கப்பட்ட வேண்டுமானால் அவருடைய சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும்.

தேசம் சுதந்தரிக்கப் பட வேண்டுமானால் அவருடைய சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும்.

பவுல் கூறும்போது என்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்த பிரசங்கிக்க விருப்புகிறேன். சுவிசேஷத்தை குறித்து நான் வெட்கப்படேன் (ரோமர் 1:15,16).

நம்முடைய பெலத்திற்கேற்றார்போல் சுவிசேஷத்தை கண்டிப்பாக கூறியே ஆகவேண்டும். ரோமர் 16:26-ன் படி நம்மை பற்றி அல்ல கிறிஸ்துவை பற்றியே பேச நம்மை அழைத்திருக்கிறார்.1 கொரி.9:16 சுவிசேஷம் சொல்வது நம்மேல் விழுந்த கடமை அறிவிக்காவிட்டால் ஐயோ. சுவிசேஷம் அறிவித்தால் ராஜ்யம் கர்த்தருடையதாகும்.

ரோமர் 10:14,15-ன் படி அவரை குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்.

C.T. ஸ்டட் கூறும்போது நகரத்தின் நுழைவு வாயிலில் ஒரு மீட்பின் கடையை நடத்த விரும்புகிறேன். இது மவுனமாய் இருக்கிற காலம் அல்ல. திறந்த வாசல் அடைபடுமுன் ஞானமாய் செயல்பட்டு ராஜ்யத்தை கர்த்தருடையதாய் மாற்ற, தேவ திட்டம் நமது பாரமாய் மாற ஜெபம் செய்வோம். செயல்படுவோம். ஆண்டவர் இயேசு தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.



# சாத்தியமல்லாததை சாத்தியமாக்கும் ஜெபம்

Rev. J. தேவதாசன் கலையரசன்
வில்லிவாக்கம் மண்டல தலைமைப் போதகர்

சுகமளிக்கும் ஊழியத்திலும் பிசாசைத் துரத்தும் ஊழியத்திலும் தோற்றுப்போனார் சீஷர்கள். அந்த வாலிபனுடைய தகப்பனோ நேரடியாக அதைக்குறித்து குற்றம் சாட்டினார். உமது **சீஷர்களால் ஏன் கூடாமற்போயிற்று** (மத்.17:15,16) என்று கேள்வி கேட்டார். சீஷர்களும் இயேசுவிடம் தனித்து வந்து எங்களால் **ஏன் கூடாமற் போயிற்று?** என்று கேள்வி கேட்டார்கள். அதற்கு இயேசு கிறிஸ்து கூறிய பதில் மற்றும் அவரது உன்னதமான போதனையை பொதுவாக, "பிசாசைத் துரத்துவது எப்படி" என்கிறதை பாடத்துடன் சுருக்கிக் கொள்கிறோம். ஆனால் அதைவிட மேலான சத்தியம் ஒன்றும் அதற்குள் மறைந்து கிடக்கிறது என்பதை இன்று தியானிப்பது நல்லது.

### 1. மலையை அப்புறப்படுத்தும் கடுகுகளவு விசுவாசம்

அவரது அற்புதம் செய்யும் ஆற்றலை, பிசாசுகளைத் துரத்தும் ஆற்றலை முகமுகமாக கண்டவர்கள் இயேசுவின் சீஷர்கள். (அப்.10:38) முதன் முதலாக இயேசு செய்த அற்புதத்தின் நோக்கமே சீஷர்களுக்குள் விசுவாசத்தை ஏற்படுத்துவது தான் (யோவான் 2:11). அப்படியானால் அவர்களுக்குள் கடுகளவு விசுவாசம் இதற்குள் வந்திருக்காதா? நிச்சயம் இது சிந்தனைக்குரிய கேள்விதான். நிச்சயம் அவரை அதற்கு மேலாக விசுவாசத்தினால்தான் அவரை தொடர்ந்து பின்தொடர்ந்து (யோவான் 6:66-69). நிலைத்து நின்றார்கள்.

அப்படியானால் "கடுகளவு விசுவாசம் இருந்தால்" என்பது எப்படி இவர்களுக்கு பொருந்தும்? இந்த வசன இறுதியில் **"உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது" என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்கிறேன்** என்று சொன்னார் பாருங்கள். அதின்பேரில்தான் அவர்களுக்கு கடுகளவுகூட விசுவாசம் இல்லாமல் இருந்தது. ஆகவே நான் அவர்களால் இயேசுவை நம்பிய போதும் பிசானைத் துரத்த இயலவில்லை. அன்று அவர்களுக்குத் தேவையாக இருந்தது. இயேசுவை விசுவாசிப்பதால், கர்த்தர் தன்னைப் பயன்படுத்துவார் என்கின்ற விசுவாசம்தான். இந்த விசுவாசம் குறைந்தபட்சம் **கடுகளாவாவது** இருக்க வேண்டும் என்பதே. அவர் கூறியதின் மையக்கருத்து.

நம்மை பொறுத்தமட்டில் நம்முடைய சர்வ வல்ல தேவன் இயேசு கிறிஸ்துவின் வல்லமையை நாம் ஒருபோதும் சந்தேகிக்கவே மாட்டோம். ஆனால் இதை, "நீ செய்ய வேண்டும். உன்னால் முடியும் என்று அவர் நம்மைப் பார்த்துச் சொல்லும்போது" **என்னாலோ? நானா?** என்ற சந்தேகம் வந்து நம்மை ஒட்டிக்கொள்கிறது, செயல்பட தயங்குகிறோம்.

இயேசு கிறிஸ்துவோ நம்மிடம் எதிர்பார்ப்பது அவரைப் போலவே நாம் செயல்பட வேண்டும் என்பது தான் (யோவான் 14:12). உன்னால் முடியும் என்று அவர் கூறுகிறார். இன்று கடுகளாவது அதை விசுவாசிப்போமா?.

### 2. ஜெபத்திலும் தேவை கடுகளவு விசுவாசம்

இயேசு கிறிஸ்துவின் இந்த உன்னதமான போதனையை, பிசாசைத் துரத்துவதுடன் மட்டும் சுருக்கிக் கொள்ளக்கூடாது. மாறாக **சாத்தியமில்லாததை சாத்தியமாக்கும்** ஜெபத்துடன் தொடர்புபடுத்துவதும் அவசியம். ஏனென்றால், "மலையைப் பார்த்து இவ்விடம் விட்டு அப்புறம் போ" என்கிற வார்த்தை யூத ரபிமார்கள்

அதிகம் பயன்படுத்திய ஒன்றாகும். சாத்தியமில்லாத ஒன்றை அணிந்து செயல்பட்டு அதை சாத்தியமாக்கும்படி உற்சாகப்படுத்த இவ்வார்த்தையை அவர்கள் அதிகம் பயன்படுத்தினார்கள் ரபிமார்கள்.

நம்மை பொறுத்தமட்டில் ஜெபத்தை கேட்பவர் பதில் கொடுப்பவர் (சங்.65:2) என்று கர்த்தரை நம்புவதில் நாம் சளைத்தவர்கள இல்லை. வசனங்களை வாக்குத்தத்தங்களைச் சொல்லி ஜெபிப்பதிலும் நாம் குறைந்தவர்கள் இல்லை (யோவான் 14:14). ஆனால் நான் ஜெபித்திருக்கிறேன் பதில் எப்படியிருக்குமோ? கர்த்தருடைய சித்தம் என்னவென்று தெரியவில்லையே என்றல்லவா சந்தேகத்துடன் ஜெபத்தைவிட்டு எழும்புகின்றோம், காரணம் என்ன? **உங்களால் கூடாத காரியம் ஒன்றில்லை** என்று இயேசு கூறியதை நம்ப மறுப்பதே காரணமாகும்.

இன்றைக்கு நமக்குத் தேவை. ஜெபத்திற்கு பதில் கொடுப்பதில் தேவனுக்கு உள்ள வல்லமையை நம்புவது மட்டுமல்ல, **நான் ஜெபித்தால் கூட** அவர் எனக்குப் பதில் கொடுப்பார் என்பதில் தான் நமது விசுவாசம் வளர வெளிப்பட வேண்டும்.

## 3. தாவீதின் ஜெபம் இத்தகையது

தாவீதின் ஜெபம் துதியுடன் ஆரம்பிக்கும். உள்ளத்தின் பாரங்கள் விண்ணப்பமாக தேவ சமூகத்தில் ஊற்றப்படும். இறுதியாக கர்த்தர் பதில் தந்துவிட்டதாக நம்பி துதியுடன் முடிப்பார். இது நமக்குத் தெரிந்ததே.

அவரது ஜெபங்கள் ஒருபோதும் தனது கவலைகளை ஒப்படைப்பது மட்டுமாய் இராது. அதில் அவர் தான் பெறப்போகிற பதில்களை நம்பிக்கையுடன் பார்த்து விசுவாசித்து அறிக்கை செய்வதாக இருக்கும்.

அதுவும் அவரது ஜெபங்கள் பெரும்பாலும் **சாதாரணமான** காரியங்களுக்கானதாக இல்லாமல் மாறாக **சாத்தியமில்லாததை சாத்தியமாக்கும்** ஜெபமாக இருந்தது. காரணம், என் விண்ணப்பத்தைக் கேட்பார் என்பதே அவரது நம்பிக்கை ஆகும். நான் ஜெபித்து அவர் பதில் கொடுப்பாரா, கிடைக்குமா? என்ற சந்தேகம் துளியும் அவருக்குள் இருக்காது. அதற்கு ஒரு நல்ல உதாரணம் 18-ம் சங்கீதம்.

18-ம் சங்கீதத்தில் பெரிய அளவு விண்ணப்பங்கள் இல்லை. பெரும்பாலான வசனங்கள் அவர் சவுலின் கைக்குத் தப்பிவித்தது உட்பட அநேக காரியங்களைச் சொல்லியே துதிகளாக ஏறெடுத்திருக்கிறார். ஆனால் அவரது இந்த வார்த்தை மிக முக்கியமானது.

"உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன். என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்" (அப்.18:29). அவரது இந்த அறிக்கையில் முடியுமா? என்ற சந்தேகம் இல்லை. சேனைக்குள் அதுவும் தனியாக **பாய்வேன்**, எனது தடைகளை கர்த்தர் அகற்றுவார் என்று கண்ணீர் விட்டு ஜெபித்துக் கொண்டிருக்கவுமில்லை... மாறாக **நானே** மதிலைத் தாண்டுவேன் என்ற விசுவாசம் உள்ளதாக இருக்கிறது. அவரது ஜெபத்தைக் குறித்த விசுவாசம் குறிப்பாக கர்த்தர் கொடுக்கும் பதில்களை இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் கொடுப்பார் எனபதாகவே இருக்கும் (வசனம்.6-14)

## இறுதியாக

இன்றைக்கு, என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான் என்று இயேசு கிறிஸ்துவின் வார்த்தையை (யோவான் 14:12) நம்புவார்கள், எழும்ப வேண்டும். உங்களால் கூடாத காரியம் ஒன்றில்லை என்கின்ற சத்தியத்தை நம்பும் தேவ சேனை எழும்ப வேண்டும். சின்ன தேவைகள், ஆசைகளை ஜெயங்களாக ஏறெடுத்து வாழ்க்கை ஓட்டுவதாக அல்லாமல், **சாத்தியமில்லாத காரியத்தையும் சாத்தியமாக்கும்** "கடுகளவு விசுவாசத்துடன்" ஜெயிக்கும் மக்கள் எழும்ப வேண்டும்.

# கிறிஸ்துவினிடத்தில் பங்கு




Rev. Steve Asir
(President - Christ's Ambassadors)

அன்பான கிறிஸ்துவின் ஸ்தானிகர் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

தேவன் தமது மகா பெரிய கிருபையினால் நம்முடைய மத்திய வாலிபர் முகாமை ஆசீர்வாதமும் நன்மையுமாய் நடத்திக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை!

கடந்த இதழில் நாம் தியானித்தபடி நேர்த்தியான பங்கு நம்முடைய வாழ்வில் நாம் பெறுவதே மேன்மை. தேவனுடைய ராஜ்யத்துக்குப் பங்குள்ளவர்களாய் ராஜ்யவாசியாய் நாம் வாழ்வது அவசியம். அந்த நிலையில் கிறிஸ்துவினிடத்தில் நமக்குப் பங்கு மிக முக்கியம். எபி 3:14-ம் வசனத்தில்

> *"நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்".*

### கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்கள் யார்?

#### 1. கர்த்தருக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்கள் :-

உபா 10:8,9 வசனங்களில் கர்த்தர் லேவியின் கோத்திரத்தைத் தமக்கென்று பிரித்தெடுத்து அவர்களுக்கு அவரே பங்கும் சுதந்தரமுமானார். இன்றைக்கும் இவ்வுலகத்தில் தேவன் நம்மைப் பிரித்தெடுத்து அவருடையவர்களாய், அவருக்குச் சொந்தமானவர்களாய் நம்மை ஏற்படுத்தி அவரே நம்முடைய பங்காய் இருக்கிறார். நாம் பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கைக்கு ஒப்புக்கொடுத்து பிரித்தெடுக்கப்-பட்டவர்களாய் இவ்வுலகத்தில் தேவனுக்கென்று வாழ்வோமானால் நமக்கு கிறிஸ்துவினிடத்தில் நிச்சயமான பங்குண்டு.

இவ்வுலகத்தில் அநேகக் காரியங்கள் நம்மைக் கவர்ந்து இழுக்கலாம். ஆனால் அவைகள் எல்லாவற்றிலும் இருந்து விலகிக் கர்த்தருக்கென்று வேறுபிரிக்கப்பட்ட வாழ்க்கை பவுலைப் போல வாழ்வோமேயானால் பவுல் சொன்னது போல "கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்று கர்த்தரே நம்முடைய நித்திய பங்காயிருப்பார்.

## 2. கர்த்தரை நம்பியிருக்கிறவர்கள் :-

சங் 16:5-ஆம் வசனத்தில் சங்கீதக்காரன் கர்த்தர் என் சுதந்தரமும் பங்குமானவர் என்று சொல்லுகிறார். ஆனால் யாருக்கென்றால் சங் 16:1-ல் கர்த்தரை நம்பியிருக்கிறமனுஷன். நாம் கர்த்தரையே நம்பியிருப்போமானால் நிச்சயம் அவரிடத்தில் பங்குள்ளவர்களாய் இருப்போம். பலமான கோட்டையுள்ள நகரமாகிய எரிகோவில் ராகாப் எதன் மேலும் நம்பிக்கை வையாமல் கர்த்தர் ஒருவரை மாத்திரமே முழுமையாய் நம்பி அவ்விசுவாசத்தைச் செயலில் காட்ட சிவப்பு நூலைத் தன் ஜன்னலில் கட்டி வைத்தாள். எரிகோ கோட்டை விழுந்த போது அவள் நம்பிக்கை வீண் போகாமல் கர்த்தரிடத்திலும் அவர் ஜனத்தாரிடத்திலும் பங்குள்ளவளாய் மாறினாள். எரிகோவில் யாருக்கும் கிடைக்காத நேர்த்தியான பங்கு ராகாபுக்குக் கிடைத்தது. நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடந்தால் கர்த்தரிடத்தில் பங்குள்ளவர்களாய் இருப்போம்.

## 3. கர்த்தரை நேசிக்கிறவர்கள் :-

சங் 73:25,26-ல் சங்கீதக்காரன், உம்மையல்லாமல் வேறேவிருப்பம் இல்லையென்று சொல்லி கர்த்தரே என் பங்குமாயிருக்கிறார் என்று அறிக்கையிடுகிறதைப் பார்க்கிறோம். கர்த்தரிடத்தில் அன்பு செலுத்துகிறவர்களுக்கு, அவரை நேசிக்கிறவர்களுக்கு அவரிடத்தில் பங்குண்டு. எல்லாவற்றையும் விட தேவனை அதிகமாய் நேசித்த ஆபிரகாம் தன் வாழ்வில் கர்த்தரையே தன் பங்காகக் கொண்டிருந்தான். எத்தனையோ காரியங்கள் அவன் வாழ்வில் வந்தாலும், அவன் வாழ்வை விட்டுப் பிரிந்து போனாலும் கர்த்தருக்கே முதலிடம் கொடுத்து அவரையே நேசித்தான். அதன் விளைவு அவன் கர்த்தரிடத்தில் பங்குள்ளவனாய்த் தேவனே தம்மை நான் ஆபிரகாமின் தேவன் என்று அறிமுகம் செய்யத்தக்க ஆபிரகாமின் வாழ்வில் கர்த்தரிடத்தில் பங்கிருந்தது.



நாம் கர்த்தரை அதிகம் நேசிப்போமேயானால் நமக்கும் கர்த்தரிடத்தில் பங்குண்டாகும். உலக நேசம் கிறிஸ்துவுக்கு விரோதமான பகையாயிருக்கும். இந்நாட்களில் அதிகம் கர்த்தரை நேசிப்போம், அதிகம் அவரை நம்பி வாழுவோம். பிரித்தெடுக்கப்பட்டவர்களாய்த் தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்து நிலைத்திருப்போம். நிச்சயமாய் நாம் கர்த்தரிடத்தில் பங்குள்ளவர்களாய் இருப்போம். கர்த்தர் நம்மில் மகிமைப்படுவார்.

ASSEMBLIES OF GOD

# ANTIOCH BIBLICAL SEMINARY & COLLEGE

Antioch Biblical Seminary & College — TEACHING THE TRUTH IN LOVE

**ABSC is an Integral Part of TPAG-SIAG**

**Accredited by Asia Theological Association**

**Courses Offered:**

| Courses | Duration | Qualification |
| --- | --- | --- |
| B.Th. | 3 Years | 12th Pass |
| M.Div. | 2/3 Years | B.Th. (ATA)/any University Degree |
| Dip.Th. | 2 Years | 10th Pass |

**M.Th. Programs:**
(Residential)
**Christian Theology**
**Religion & Philosophy**
begin shortly

**Doctoral Programs:**
(Semi-Residential)
***Ph.D / D.Min***
are on the anvil

**For More Details:** **College Reopens on the First Week of June**

Contact: The Registrar, Antioch Biblical Seminary & College
Post Box-05, Pondicherry University, Mathur Road, Puducherry-605014.
09865209821, 09894896808







# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ்! எப்படியிருக்கிறீங்க? தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ பகுதிக்கு நீங்கள் தரும் மேலான ஆதரவை எண்ணி தேவனை துதிக்கிறேன். தேர்வு காலம் நெருங்கிவிட்டது. எங்கு பார்த்தாலும் இதைப் படி, இப்படிப் படி என்ற அட்வைஸ் உங்கள் காதில் விழுந்துகொண்டிருக்கலாம். எல்லாம் நமது நன்மைக்குதானே. கொஞ்சம் பிரயாசப்பட்டால் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியாக இருக்கலாம். அங்கிள் நீங்களுமா.. சீக்கிரம் கதை சொல்லுங்க என நீங்க மனதில் முணுமுணுப்பது கேட்கிறது. எனவே நேரடியாக கதை சொல்ல ஆரம்பிக்கிறேன். வாங்க கதை கேட்கலாம்.

சடையன் ஒரு ஆடு வியாபாரி. ஆட்டுக்குட்டிகளை விலைக்கு வாங்கி விற்று வந்தான். ஒருநாள் தன் பன்னிரெண்டு வயது சிறுவனிடம் பணம் கொடுத்து, பக்கத்து கிராமத்தில் போய் அவசரமாக ஒரு ஆட்டுக்குட்டி வாங்கிவரும்படி அனுப்பினான்.

சிறுவன் ஆட்டுக்குட்டி ஒன்றை வாங்கி ஒரு சிறு சாக்குப்பைக்குள் போட்டுக் கொண்டான். அவன் வரும் வழியில் கால்பந்தாட்டம் நடந்துகொண்டிருந்தது. பையன் ஆட்டுக்குட்டி பையை கீழே வைத்துவிட்டு, விளையாட்டை ரசிக்க ஆரம்பித்தான். அப்பா அவசரமாக அனுப்பிய கடமையை மறந்தான். அங்கிருந்த பிறிதொரு குறும்புச் சிறுவன் அந்தப் பையினுள்ளிருந்த ஆட்டுக்குட்டியை எடுத்து விட்டு அதற்கு பதில் ஒரு நாய்க்குட்டியைப் போட்டுவிட்டான்.

சிறுவன், ஆட்டுக்குட்டிப் பையை தந்தையிடம் கொடுத்தான். பைக்குள் நாய்க்குட்டி இருந்தது. தந்தைக்கு மகா கோபம், மகனை திட்டி அடித்தார். மீண்டும் போய் ஆட்டுக்குட்டியை வாங்கி வரும்படி அனுப்பிவிட்டார்.

சிறுவன் செல்லும் வழியில் இன்னும் பந்தாட்டம் நடந்துகொண்டிருந்தது. பையன் பழையபடியே பையைக் கீழே வைத்துவிட்டு பந்து விளையாட்டைப் பார்க்க ஆரம்பித்தான். அதே குறும்புக்காரப் பயல் நாய்க்குட்டியை எடுத்துவிட்டு ஆட்டுக்குட்டியை போட்டுவிட்டான்.

பந்து விளையாட்டின் ஒரு ஆட்டம் முடியவும் சிறுவன் பையை எடுத்துச்சென்று ஆடு வியாபாரியிடம் பையைக் கொடுத்து, தன்னை ஏமாற்றிவிட்டதற்காக கோபித்து, மாற்றித் தரும்படி முறையிட்டான். வியாபாரி பையை வாங்கித் திறந்து பார்த்தபோது ஆட்டுக்குட்டி இருக்கக்கண்டு சிறுவன் மீது எரிந்து விழுந்தான்.

சிறுவன் அழுகையோடு திரும்பி வந்தான். பந்து விளையாட்டு இப்பொழுதும் நடந்துகொண்டிருந்தது. சிறுவன் மீண்டும் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான். குறும்புக்காரப் பையன் இந்த முறையும் ஆட்டுக்குட்டியை எடுத்துவிட்டு நாய்க் குட்டியைப் போட்டுவிட்டான். ஆட்டம் முடியவும் சிறுவன் பையைத் தூக்கிக்கொண்டு ஓடினான். பைக்குள் நாய்க்குட்டி இருப்பதைக்கண்ட தகப்பனுக்கு பொல்லாத கோபம் வந்து, மகனை நன்கு அடித்துவிட்டார்.

பையனுக்கு எங்கு தவறு நடந்தது என்று தெரியவில்லை. நாய்க்குட்டியைப் பார்த்து பரிதாபமாகச் சொன்னான். 'ஏய், நாய்க்குட்டி! நீ நாய்க்குட்டியாகவே இரு, அல்லது ஆட்டுக்குட்டியாய் இரு, இரட்டை வேடம் போடாதே' என்றான்.

அன்பு தம்பி தங்கச்சி, நாம் எப்படி இருக்கிறோம்? ஆலயத்தில் ஆட்டுக்குட்டியைப் போன்று காட்சி தரும் நாம் சில தருணங்களில் தங்கள் வீட்டிலும், படிக்கும் இடத்திலும் சுபாவம் மாறிய நபராக மாறி விடுகிறோம். நாம் நாமாகவே இருக்க வேண்டுமென்பதே தேவனுடைய விருப்பம். சிந்தையிலும் சுபாவத்திலும் மாற்றம் இல்லாமல் நானும் இயேசப்பா பிள்ளை என கூறுவது வேஷம் மாறிய ஆட்டுக்குட்டியைப் போலதானே. எனவே நமது வாழ்க்கைப் பயணத்தில் வரும் ஆபத்துகளில் கவனமாயிருங்கள்.

சிறுவன் தனக்குக் கொடுத்த பணியைச் சரிவரச் செய்யவில்லை. வேலையை விட்டு வேடிக்கை பார்த்ததின் விளைவாகவே வேதனையிலும் சோதனையிலும் அடிபட நேர்ந்தது. 'தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்' (நீதி.22:29) என வேதம் கூறுகிறது. எனவே உங்கள் கடமைகளில் கவனமுள்ளவர்களாகவும், எச்சரிக்கையுள்ளவர்களாகவும் இருப்பது காலத்தின் அவசியமாகும். இது தேர்வை எதிர்நோக்கியிருக்கும் காலம். இந்த காலத்தில் காலத்தின் அவசியத்தை உணர்ந்து செயல்பட வேண்டும். தேவையற்ற, அவசியமற்ற, அவசரமற்ற செயல்களில் ஈடுபட்டு, நம் நிலையை மறந்துவிடக்கூடாது. தேர்வு காலங்களில் உடலையும் மனதையும் ஜெபத்துடன் ஆரோக்கியமாக வைத்துக்கொள்வது உங்களை வெற்றியாளர்களாக மட்டுமல்ல சாதனையாளர்களாகவும் மாற்றும் என்பதில் சந்தேகமில்லை.

---

## விசுவாசத்தில் வளருங்கள்



ஜார்ஜ் முல்லர்
1805-1898

வேதாகமத்தை முழுமையாக நீங்கள் வாசித்தது உண்டா?. விசுவாச வீரன் ஜார்ஜ் முல்லர் வாசித்திருக்கிறார். ஒன்று, இரண்டு முறை அல்ல. இருநூறு முறைகள். நம்ப முடியவில்லையல்லவா? அதிலும் நூறு முறைகள் முழங்கால் ஊன்றியே வாசித்திருக்கிறார்.

விசுவாசத்தினாலேயே வெற்றி கண்ட மாமனிதர்; ஆண்டவர் பயன்படுத்திய அற்புதப் பாத்திரம்; அனாதைகளின் அருமைத் தந்தை; ஜெபத்தில் சிறந்தவர்; ஆண்டவரின் நாம மகிமைக்காக அரும் பெரும் செயல்கள் செய்தவர் இவர்.

வாழ்வில் ஒளி இழந்தோருக்கு வழிகாட்ட அனாதை இல்லங்களைக் கட்டினார். ஆயிரமாயிரம் குழந்தைகள் இதனால் எதிர்காலம் பெற்றனர். விசுவாசத்தினால் அன்றாடத் தேவைகளை ஆண்டவரிடமிருந்தே பெற்றார்.

முல்லரின் பல்வேறுபட்ட நிறுவனங்களில் 1,21,683 மாணவ மாணவியர் பயின்றனர். வேத அறிவு நிறுவனங்களும், பள்ளிக்கூடங்களும் இவரால் நிருவப்பட்டன.

தன்னுடைய 70 வயதிற்குப் பிறகு 17 மிஷனரிப் பயணங்களை மேற்கொண்டார். 42 நாடுகளைச் சுற்றி இருபது லட்சம் மைல்கள் நிலத்திலும், நீரிலும் கடந்து ஆயிரக்கணக்கான பிரசங்கங்கள் செய்து ஏறக்குறைய முப்பது லட்சம் மக்களுக்கு கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைத்தார்.

தேவைகள் நிறைந்தபொழுது இவர் மனிதரை நாடியதில்லை. தேவனையே சார்ந்திருந்தார். உலகமெங்கும் நற்செய்தி அறிவிக்க 189 மிஷனரிகளை "உலக நற்செய்தி மிஷன்" என்ற தமது நிறுவனத்தின் மூலம் தாங்கினார்.

அனாதைகளில் தந்தையாய், ஆதரவற்றோரின் அடைக்கலமாய் வாழ்ந்த ஜார்ஜ் முல்லர் தனது 93ஆம் வயதில் நித்திய வாழ்வைப் பெற்றார்.

அன்பரே! உமது விசுவாசம் மனிதரிடத்தில் உள்ளதா? இறைவனை சார்ந்து உள்ளதா?

ஊழிய அழைப்பு பெற்ற
பெண்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு

# திரித்துவ வேதாகமக் கல்லூரி

(A Theological Institution of the Tamil District Council of SIAG)
Accredited by Asia Theological Association (ATA)

திரித்துவ வேதாகமக் கல்லூரி, மாணவிகள் தங்கி படிப்பதற்கான சிறந்த, நவீன வசதிகளைக் கொண்டுள்ளது.
அர்ப்பணிப்புள்ள சிறந்த கல்வித் தகுதியுடைய ஆவிக்குரிய அனுபவமிக்க ஆசிரியர்களைக் கொண்டு போதிக்கப்படுகிறது.

| Course | Duration | Eligibility |
|---|---|---|
| Master of Divinity (M.Div.) English | 3 Years | Any Bachelor Degree |
| Bachelor of Theology (B.Th.) - English | 3 Years | HSC (+2) Pass |
| Diploma in Theology (Dip.Th.) - Tamil | 2 Years | S.S.L.C Pass |

2025-2026-ம் கல்வியாண்டிற்கான மாணவியர் சேர்க்கை நடைபெற்று கொண்டிருக்கிறது.
விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டிய இணையதள முகவரி
www.trinitybiblecollege.in

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வந்து சேர வேண்டிய
**கடைசி நாள் : மே 20, 2025**

தொடர்பு :
The Registrar
**Trinity Bible College**
Kanakkapillaivasai, Post Box No. 25, Sengottai - 627 809
Phone : 04633 - 234243 & 99942 47117, 75985 43752



# சாதனையை நோக்கி
## TOWARDS ACHIEVEMENT

Rev.K. ராஜா
இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்

கிறிஸ்துவில் அன்பான மாணவ, மாணவிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள். சாதிக்க வேண்டும் என்கிற ஆசையோடு இருக்கிறீர்களா? ஆனால் அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை என்கிற மனநிலையோடு ஆண்டு இறுதித் தேர்விற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறீர்களா? உங்களுக்கு சில வழிமுறைகள்.

சாதனையாளர்களாக யாரும் பிறப்பதில்லை. தங்கள் செயல்கள் மூலம் சாதனையாளர்களாக மாறுகிறார்கள். சாதிக்க விரும்புகிற அனைவருக்கும் இந்த உலகில் வாய்ப்புகள் கொட்டி கிடக்கிறது. ஆகவே,

**1. உழைப்பை வீணாக்காதீர்கள் : DON'T WASTE EFFORT:**

... நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன் (1கொரி. 9:26).

- சாதிக்க முடியாமல் போராடுகிறவர்கள் யாரும் சோம்பேறித்தனமானவர்கள் இல்லை. மாறாக, உழைப்பை வீணாக்குகிறவர்கள்.
- சாதிக்க விரும்புகிறவர்கள் செய்ய வேண்டியவைகளைச் செய்வார்கள். தேவையில்லாதவைகளைச் செய்ய மாட்டார்கள்.
- நீங்கள் விரும்புகிறதையெல்லாம் செய்து சாதனை படைக்க முடியாது; செய்ய வேண்டியதை செய்தால் மட்டுமே சாதனை படைக்க முடியும். You won't attain your goals by following every desire; True progress is made by addressing what must be done.
- உங்கள் நேரத்தை, உங்கள் அறிவை, உங்கள் திறமையை, உங்கள் வாய்ப்புகளை வீணாக்காமல், நீங்கள் என்ன சாதிக்க விரும்புகிறீர்கள் என்பதை தீர்மானியுங்கள்.
- நீங்கள் சாதிக்க விரும்புகிற காரியத்தை சாதிப்பதற்கு வசதியாக, அதை சின்ன சின்ன இலக்குகளாக மாற்றுங்கள்.

**2. இலக்கை நோக்கி தொடருங்கள்: PROCEED TO THE DESTINATION:**

... இலக்கை நோக்கித் தொடர்கிறேன் (பிலிப்பியர் 3:14).

- சாதிக்க விரும்புகிறவர்களுக்கு நிச்சயமான ஒரு இலக்கு இருக்கும். தெளிவான இலக்கை உடையவர்கள் தான் சாதனையை நோக்கி செயல்பட முடியும். சாதிக்க முடியும். குகேஷ் என்ற மாணவன் திடீரென்று செஸ் விளையாட்டில் உலக சாதனையாளனாக மாறிவிடவில்லை. மாறாக, தனது சாதனைக்கான இலக்கை நோக்கி செயல்பட்டுக் கொண்டே இருந்ததின் விளைவுதான் உலக செஸ் சாம்பியன் என்ற சாதனை பட்டம்.
- ஒவ்வொரு செயலும் உங்கள் சாதனையை அடைவதற்கான இலக்கை நோக்கி இருக்கட்டும். Every action should be towards the goal of reaching your achievement.

உதாரணமாக, நீங்கள் ஒரு பாடத்தைப் படிக்கும்போது அதிலிருந்து எந்த கேள்வி கேட்கப்பட்டாலும், பதில் சொல்ல முடியும், எழுத முடியும் என்ற நிலை வரைக்கும் படித்து விடுங்கள்.

- உங்கள் இலக்கை அடைவதற்கு தீவிர முயற்சி எடுங்கள். வெற்றியாளர்கள் ஒரு போதும் தங்கள் முயற்சியைக் கைவிடமாட்டார்கள்..
- முயற்சிகளில் தோற்றுப்போகலாம். ஆனால், முயற்சிப்பதை கைவிடக்கூடாது. Attempts may be lost. But don't give up trying. .

**3. தேவனைச் சார்ந்திருங்கள்: DEPEND ON GOD**

குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும் (நீதி. 21:31).

- தேவன், தமக்கு பயந்து, தன்னைச் சார்ந்திருக்கிறவர்களுக்கு ஞானம் தருகிறார் (நீதி. 1: 7).
- அவருக்குள் ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது (கொலோ. 2:3).
- உண்மையாய் அவரை நோக்கி ஜெபிக்கிறவர்களுக்கு அதாவது அவரிடத்தில் கேட்கிறவர்களுக்கு ஞானத்தை தருகிறார் (1இராஜா. 4:29; யாக். 1:5).
- உண்மையாய் முயற்சித்து, கடினமாய் உழைக்கிறவர்களை தேவன் ஆசீர்வதிக்கிறார் (மத். 25: 20, 21).
- தேவன் வெற்றி சிறக்கப்பண்ணுகிறார் (2 கொரி. 2:14).

**3. வெற்றியைக் கொண்டாடுங்கள்: CELEBRATE SUCCESS**

... ஓட்டத்தை முடித்தேன்... (2 தீமோ. 4:7).

- சிறிய வெற்றியையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுங்கள். அதுதான் அடுத்த வெற்றிக்கு உற்சாகப்படுத்தும்.
- உங்கள் வெற்றியை மற்றவர்களோடு ஒப்பிடாதீர்கள். உங்கள் வெற்றியில் மற்றவர்களைப் பார்க்காதீர்கள், அதில் உங்களைப் பார்க்க பழகுங்கள். Don't compare your success with others. Don't see others in your success, learn to see yourself in it.
- நீங்கள் யார் என்பதையும், உங்களுக்குள் என்ன திறமை இருக்கிறது என்பதையும் காண்பிக்கும் கண்ணாடி தான் உங்கள் வெற்றி.
- மற்றவர்களைப் போல இருப்பது அல்ல வெற்றி. நீங்கள் யாராக இருக்க வேண்டுமென்று தேவன் ஒரு திட்டம் வைத்திருக்கிறார். அதற்கு ஏற்ற தகுதியையும், திறமையையும் தேவன் உங்களுக்கு தந்திருக்கிறார்.
- ஆகவே, உங்கள் வெற்றியைக் கொண்டாடுங்கள். சாதனையை நோக்கிய ஓட்டத்தில் நிச்சயமாக பயம், சந்தேகம், அதைரியம் எல்லாம் இருக்கத்தான் செய்யும். அவைகள் எல்லாவற்றையும் தாண்டி நீங்கள் வெற்றி பெற உங்களை வாழ்த்துகிறோம்.

உங்களுக்காக ஜெபிக்கிறோம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.



# Is PRAYER TIME needed during the EXAM TIME?

Rev. பெகின் சாமுவேல்
இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு என் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்களை தமிழ்பிரதேச சிறுவர் ஊழியங்கள் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இதழ்வாயிலாக உங்களை சந்திப்பதிலும் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். சில காரியங்களை பகிர்ந்துகொள்வதிலும் மிக்க சந்தோஷம் அடைகிறேன். பிள்ளைகளுக்கான தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருக்கும் நாட்களிது. தேர்வு நேரங்களில் செல்போன் பார்ப்பதை, விளையாடுவதை, T.V பார்ப்பதை பிள்ளைகள் தவிர்க்கிறார்கள். அது நல்ல காரியம்தான். தேவையில்லாமல் நேரத்தை வீணடிப்பதைக் காட்டிலும் பாடங்களில் கவனம் செலுத்தி படிப்பது நல்லது. ஆனால் ஜெபிப்பது, வேதம் வாசிப்பது, ஆராதனைகளுக்கு வருவது போன்ற காரியங்களையும் இதனுடன் நம் பிள்ளைகள் அதிகம் தவிர்க்கிறார்கள். பெற்றோர்களாகிய நாமும் அவைகளை கண்டு கொள்வதில்லை. அதனுடைய அவசியத்தை புரிந்து கொள்வதில்லை. ஏன் தேர்வு நாட்களில் ஜெபம் செய்ய வேண்டும் என்பதை இந்த இதழில் நாம் பார்ப்போம்.

### 1. ஜெபம் ஞானத்தை தரும்

யாக்.1:5 உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால்.....தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். இந்த வசனத்தில் நாம் தெளிவாய் வாசிக்கிறோம் நமக்கு ஞானம் இல்லையென்றால் ஜீவனோடு இருக்கிற ஆண்டவரை நோக்கி ஜெபிக்க வேண்டும். ஏன் என்றால் அவரே ஞானமாயிருக்கிறார். ஞானத்தின் ஊற்றாயிருக்கிறார். தன்னுடைய ஞானம் தனக்குப் போதாது என்று உணர்ந்த சாலோமோன் தேவனிடத்தில் ஞானத்தைக் கேட்டார். அதற்கு தேவனுடைய பதில்: ‘ஞானமும் உணர்வுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன். இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை’ (1 இராஜா.3:12). உங்கள் பாடங்களை படிக்கும்போது அநேக காரியங்கள் உங்களுக்கு விளங்கிக் கொள்ள முடியாமல், புரிந்துகொள்ள முடியாமல் கலக்கத்தோடு இருக்கும்போது ஜெபியுங்கள். கர்த்தர் உங்களுக்கு ஞானத்தை தருவார்.

### 2. ஜெபம் உயர்வைத் தரும் மாற்றும்

பாபிலோன் தேசத்திலே கர்த்தர் தானியேலுக்கும், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவுக்கும் சிறந்த ஞானத்தைக் கொடுத்தார். அவர்கள் அந்த தேசத்திலுள்ள சகல ஞானிகளைப் பார்க்கிலும் பத்து மடங்கு அதிக ஞானமுள்ளவர்களாய் விளங்கினார்கள். வேதம் சொல்லுகிறது, ‘ஞானத்திற்கும், புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்திலே ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ,

அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்' (தானி.1:20). அதாவது நேபுகாத்நேச்சாருக்கு முன் நடந்த இறுதி தேர்வில் அவர்கள் அதிக மதிப்பெண்களைப் பெற்றனர். அதற்கு முக்கிய காரணம் அவர்கள் ஜெபிக்கிறவர்களாய் இருந்தனர். நீங்களும் ஜெபியுங்கள். உங்களை கர்த்தர் உங்கள் பள்ளியில், கல்லூரியில் உள்ளவர்களைக் காட்டிலும் உயர்த்துவார்.

### 3. ஜெபம் ஜெயத்தை தரும்

**Prayer Brings Victory** என்பது நாம் அடிக்கடி உபயோகிக்கும் ஒரு வாக்கியம். ஆம் ஜெபித்து ஜெபித்து ஜெயத்தை பெற்றுக்கொள்ளுங்கள். ஜெபமில்லையென்றால் ஜெயமில்லை. ஜெபிக்கும்போது கர்த்தர் தோல்வியை மாற்றுவார். அநேக தோல்விகளை தன் வாழ்வில் சந்தித்து உயிர் பிழைக்க ஓடி சென்ற யாக்கோபு தன் தோல்வியை ஜெயமாய் மாற்ற எடுத்த ஆயுதம் ஜெபம் தான். யாக்கோபு பின் தங்கி ஜெபித்து ஜெயத்தை அனுபவித்தான். தேவனிடம் உங்கள் பிரச்சினைகளை தோல்விகளை கூறி இருதயத்தை ஊற்றி ஜெபியுங்கள். கர்த்தர் உங்களுக்கு ஜெயத்தைத் தருவார்.

இந்த ஜெப வாழ்வின் முக்கியத்துவத்தை அறிந்து நாம் அதற்கு நேரம் ஒதுக்குகிறோமா? என்று சிந்தித்துப் பாருங்கள். சுயபலம், சுய முயற்சி, சுய ஞானத்தை சார்ந்து அதற்கு முதலிடம் கொடுத்து எதையாகிலும் சாதித்து விடலாம் என்று நினைத்தால், நாம் இறுதியில் தோற்றுப்போவது உறுதி. எனவே தேவனைப் பற்றிக் கொண்டு, இந்த நாட்களில் ஜெபத்திற்கு முதலிடத்தைக் கொடுப்போம்.

உம்மோடு (தேவனோடு) செலவிடும் ஒவ்வொரு நிமிடமும் வீணாக போகாதைய்யா
என்னை பலவானாய் மாற்றுமைய்யா

---

## போட்டி எண் : 9 (சரியான விடைகள்)

1. தெபொராள் (நியா.4:4)
2. யெப்தா (11:1)
3. பென்யமீனருக்குப் பெண் கொடுக்கிறவன் (21:18).
4. அதோனிபேசேக் (1:6).
5. கிதியோன் (8:28).
6. எழுநூறுபோர் (20:16)
7. சிம்சோன் (15:20).
8. பூரா (7:10,11).
9. மனோவா (13:2).
10. ஏபேர் (4:17).
11. ஏகூத் (3:15)
12. யெகோவா ஷாலோம் (6:24).
13. தேபேசு (9:50,51).
14. தெலீலாள் (16:4)
15. யாவீர் (10:3).
16. மீகா (17:1)
17. இஸ்மவேலரிடத்தில் (8:24).
18. செபுலோன், நப்தலி (5:18)
19. ஏலோன் (12:11).
20. கழுதையின் தாடையெலுபினால் ஆயிரம் பேரைக் கொன்றதினால் (நியா.15:16,17).
21. லாயீசு (நியா.18:7).
22. ரூத் (ரூத் 3:6).
23. மக்லோன், கிலியோன் (ரூத் 1:2).
24. ஈசாய் (ரூத் 4:22).
25. போவாஸ் (2:1).

# AGVBS 2025 - Training Centres

| DATE | PLACE | CHURCH ADDRESS & LOCATION | CONTACT NUMBERS |
|---|---|---|---|
| March 17 Monday | Trichy | Rev. Jeyaprakash S<br>Trichy City AG Church,<br>Ponnagar, Trichy. | Rev. Christy Alex<br>9994337758<br>Pr. Kingsly Jebaraj<br>9578930838 |
| March 18 Tuesday | Coimbatore | Rev. James Willingson.<br>Kovai City AG Church,<br>Selvapuram Bypass,<br>Ukkadam, Coimbatore. | Rev. Ravi Vincent<br>9344227759<br>Rev. Sasikumar<br>8220645183 |
| March 19 Wednesday | Salem | Rev. Robert Singh<br>A.G. Church,<br>Mamangam, Salem. | Rev. John Dezouza<br>9940324490<br>Pr. Somasundaram:<br>9789783464 |
| March 20 Thursday | Madurai | Rev. Corban Singh T.<br>AG Church,<br>Koodal Nagar,<br>Madurai. | Pr. Praison<br>9943051727<br>Pr. Johnson<br>8608692030 |
| March 21 Friday | Tuticorin | Pr. Gideon Anderson,<br>Pearl City AG Church,<br>3rd Mile, Tuticorin. | Rev. Mathan Samuel<br>9043039994<br>Rev. David Raja<br>9894146862 |
| March 22 Saturday | Tirunelveli | Rev. Paulus VJ,<br>Smyrna AG Church,<br>Vannarpettai, Tirunelveli | Rev. Rajkumar<br>9444405446<br>Pr. Alex Peter Paul:<br>9994763238 |
| March 24 Monday | Chengalpet | Rev. Ambrose Albert J.<br>AG Church, Church Street,<br>Lake Avenue,<br>T.K.M. Rd., Chengalpet | Rev. Ebenezer<br>9788890910<br>Pr.Yesudass<br>9894735867 |
| March 25 Tuesday | Vellore | Rev. J. Stanley Manickaraj<br>AG Church, No.58,<br>2nd West cross road,<br>Gandhi Nagar West, Vellore | Rev. Saktivel Satrak<br>9566897628<br>Pr. Chandra Mohan<br>9655038712 |
| March 26 Wednesday | Chennai (Kolathur) | Praise A.G Church<br>11, Balaji nagar,<br>2nd cross street,<br>Kolathur Chennai. | Pr. Praveen Kumar<br>7604863122<br>Pr. Jim<br>9176682443 |
| March 27 Thursday | Chennai (Nerkundram) | Rev. Jegil Ebi Doss E.<br>New Creation AG,<br>Golden George Nagar,<br>Nerkundram, Chennai. | Rev. Vincent<br>9840306113<br>Rev. Manikandan<br>8056059705 |
| March 28 Friday | Chennai (Pallikaranai) | Rev. Christdhas I<br>Hope AG Church,<br>Pallikaranai, Chennai. | Rev. Suresh<br>9840325650<br>Pr. Prabhu<br>9962343567 |
| March 29 Saturday | Pondichery | Rev. Stephen Asir,<br>AG Church,<br>Thennanjalai Road,<br>Pondichery | Rev. Victor Veeriah<br>9488494901<br>Rev. Mark<br>9344543514 |

**நேரம் : காலை 9 மணியிலிருந்து மதியம் 2 மணி வரை**

**மதிய உணவு பயிற்சிக்கு வருபவர்களை பொறுத்தது**

## போட்டி எண் : 9 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை:** E.மகேஷ்வரி; T.கலா; K.சாராள்; இவாஞ்சலின்; மரகதம்; பூங்கோதை; ஜெயசிலின்; E.கலா; கோவிலா; கிரிஜா; மயில்; S.முத்துலெட்சுமி; J.சுமதி; மாது; குளோரி; சித்ரா பிளஸ்சி; பிரின்ஸி ஜெனிபர்; பிரபா; கலா ராஜம்; T.சாந்தி; முத்துக்கோபால்; கிறிஸ்டி; விஜி; லீதியாள்; புஷ்பவல்லி; எஸ்தர்; ராதாமணி; ராணி பிளசிங்; பிரியா; அன்னாள்; ஜெனிபர்; பிரேமலதா; |**கடையநல்லூர்:** ஸ்டெல்லா; அபிஷா யூஜின்; செல்வி இந்திராணி; செலினா; டெல்ஷியா; செல்வி கண்ணன்; ரமணி; தங்கராஜ்; வினோலியா;|**திருநின்றவூர்** : எழிலரசி; கேத்ரீன்; அனுலா; தனசெல்வி; சகுந்தலா; ஜென்ஸி; வின்சி; எஸ்தர் பவானி; ரோஸ்லின் மேரி; |**இறச்சக்குளம்:** அஸ்வினி; கலா; ஷாலினி; தர்ஷினி; எஸ்தர்; ரத்ரிகா; ரேனுரூபன்; சிவதர்ஷினி; ஜெஸ்மின்; |**சேத்துப்பட்டு** : மரகதம்; சுகந்தி பெனடிக்; ஜெயராணி; மாதரசி; செல்வி பெர்சியாள்; லட்சுமி காந்தா; ஜெபா விஜய்; ஜெயந்தி; |**ஆறுமுகநேரி:** கிருபா; அனன்சி அருண்; பாக்கியா; ஏஞ்சல்; செல்வபிரியா; எஸ்தர் வெண்ணிலா; சரோஜா; அன்ஸி ரத்னம்; |**தூத்துக்குடி** : கலைச்செல்வி; பிரான்சிஸ் கௌசல்யா; பிருந்தா; மெர்சி செல்லையா; வளர்மதி சங்கர்; பாக்கியதாய்; தாசன் மோசஸ்; |**எடப்பாடி:** ஜோஸ் P. மேரி; மாலதி சுரேஷ்; அஞ்சலி அரசு; எப்சிபா ஜோயல்; ரூத்; செல்விராஜ்; சத்யா; |**நாகமலை:** விஜிலா; ஆனந்தி; |**ஸ்ரீவில்லிபுத்தூர்:** மாதவி; நெல்சன் செல்வராஜ்; மெசி; வசந்தா; பாஞ்சாலி Tr.; வெங்கடவள்ளி; |**மடத்துக்குளம்** : சரண்யா; கிரேஸ் மேரி; பரிமளா; ரூத்; சேர்மக்கனி; |**மதுராந்தகம்:** ஷகிலா; ஜோஸ்பின்; அனிதா; அலமேலு; |**தேனி:** செண்பக புஷ்பா ஜேம்ஸ்; கார்த்தியேயாயினி; கிருபா; தனம்; |**திருச்சி** : சாந்தி ஆனந்தன்; வசந்தி முத்து; கிறிஸ்டி மகாலெஷ்மி; |**கோயம்புத்தூர்:** எஸ்தர் விஜய்; ரத்தினம்; கிறிஸ்டினா அபிகாயில்; குளோரி பால்; ரோஸ்லின் சாந்தி; மேரி டென்சில்; |**வேப்பங்காடு:** பிருந்தா ஸ்ரீ; தட்சணி; மாரிகண்ணன்; |**அச்சிறுபாக்கம்:** தமிழ்செல்வி; சௌந்தர்யா கலை; செல்வகுமாரி; |**குற்றாலம்** : வேளாங்கனி; ரூத் செல்வராஜ்; |**அண்டிப்பட்டி** : தபீத்தாள் ராணி; தேவபாக்கியம்; |**ஆம்பூர்:** கிரிஜா சத்தியா; ரூபி மனோகரன்; |**மேலஅனுப்பானடி:** அனிதா; ஜெயா; |**கொத்திமங்கலம்:** உமா தேவஜோதி; ரூபவதி சித்ரா; |**அருங்குணம்:** சுந்தரமூர்த்தி; பவித்ரா; |**K.T.C.நகர்:** ஷில்வியா; சிவகாமி சாராள்; |**பரமத்தி வேலூர்:** திருச்செல்வி; பாமா; |**ஆலங்குளம் (வி)** : பிளாரன்ஸ்; உமா ரோஜ்லின்; |**மதுரை:** செல்வி சாமுவேல்; கனகவல்லி; |**சுரண்டை:** குளோரி ஞானம்; கலா சுரேஷ்; |**கூத்தாநல்லூர்:** கிளமாண்டின்; S.A.M.பாஸ்டியன்; |**கிருஷ்ணகிரி:** அன்பு ஜெயா; அனிதா ஷைலா; |**இராதாபுரம்:** ஜெய சாரோன்; மல்லிகா; |**நத்தக்காடையூர்** : ஏசையன்; மோகனா பால்; |**பழநி:** சாந்தி; எஸ்தர்; |**தர்மபுரி:** சங்கீதா; ஜாஸ்மின் ஆ.மாதம்மாள்; |**ஏழாயிரம் பண்ணை:** ஜோதிரவி; ஜாய் ராஜா; |**கோவில்பட்டி:** மரியாள் ஜெயசீலி; ரேச்சல்; |**காரைக்குடி:** S.மணி; |**கொங்கந்தான் பாறை:** சந்திரா ஆல்பர்ட்|**திசையன்விளை:** செல்வபாக்கியம்; |**வெளிப்பாளையம்:** ஜான்வெஸ்லி பிரிசில்லா; |**செண்பகராமன் புதூர்:** வனிதா; |**முக்கூடல்:** முத்துகிருஷ்ணன்; |**கம்பம்:** ஜோதிமணி; |**வீராணம்:** எப்சிபா;|**ஆழ்வார்குறிச்சி:**ஹரிலீலா;|**காட்சபுரம்:** சுசிலா;|**ரெட்டியார்பட்டி:** சத்தியநேசன்; |**பெரம்பலூர்:** பிரீத்தி;|**கல்லுக்குறி:**டால்டன்;|**மப்பேடு:** ஜான்ஸி ராணி;|**உக்கிரன் கோட்டை:** ருக்குமணி ஜெயராஜ்;|**பெருந்துறை:**புரோனிக்கா;|**சேலம்:** பெட்ரிஷியா டேவிட்;|**முல்லைவாடி:** பிளாரன்ஸ்;|**களக்காடு:** விமலாமேரி;|**காரியாகுளம்:** ஜாஸ்மின்;|**முத்தையாபுரம்:** பிரியா;|**இளையரசனேந்தல்:** டெய்சிராணி;|**கள்ளக்குறிச்சி:** தங்கம் சாக்கோ;|**ஆழ்வார் திருநகரி:** பனிமலர்;|**பசுவந்தனை:** கிருபா ஜெப்ரி;|**புளியங்குடி:** ஜெயமணி;|**ஆவடி:** சந்திரா சாலமோன்;|**வீரபாண்டியபட்டணம்:** சுகிர்தா டைட்டஸ்;|**நாசரேத்:** எஸ்தர்;|**கல்லல்:** அபிஷாக்;|**கீழஅரசூர்:** வசந்தி;|**அகஸ்தியர்பட்டி:** நிர்மலா;|**வடசேரி:** கிறிஸ்டி;|**பள்ளிக்கரணை:** பொன்செல்வி;|**ஏர்வாடி:** மரகதம்;|**கொட்டிவாக்கம்:** அமுதவள்ளி;|**நாகலாபுரம்:** குளோரி;|**செய்துங்கநல்லூர்:** சாந்தி;|**வில்லியனூர்:** செல்லப்பன்;|**கெட்டி:** சார்லஸ்;|**கௌரிவாக்கம்:** சின்னராஜி;|**சிட்லபாக்கம்:** ரெபெக்காள்;|**குரோம்பேட்டை:** கோமதிகுமார்;|**தேவகோட்டை:** மனோஜினி ரஜீன்;|**திரேஸ்புரம்:** சில்வெஸ்டர்; **இராமன்புதூர்:** அன்னம்மாள்;|**வில்லிவாக்கம்:** ரத்னா;|**குரும்பூர்:** வசந்த வினோதினி.

**பரிபூரண ஜீவன் போட்டி எண் -10**
**(1 சாமுவேல்) இருப்பிடத்துடன் விடை எழுதவும்**

1. மகா புத்திசாலியும் ரூபவதியுமாயிருந்த ஸ்திரீ யார்?
2. சவுந்தரியமான வாலிபனாயிருந்தவன் யார்?
3. நேரின் குமாரன் யார்?
4. தாவீதை தன் உயிரைப்போல சிநேகித்தவன் யார்?
5. அகிமெலேக்கின் குமாரன் யார்?
6. சிறுவயது முதல் யுத்தவீரனுமாயிருந்தவன் யார்?
7. மகா பராக்கிரமசாலியான மனுஷன் யார்?
8. யுத்தவீரனும், காரியசமர்த்தனுமாயிருந்தவன் யார்?
9. கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாய் நடந்துகொண்டவன் யார்?
10. நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ என்று சொன்னது யார்?
11. கிழவனும் ஸ்தூலித்தவனுமாயிருந்தவன் யார்?
12. சாமுவேலின் மூத்தகுமாரன் யார்?
13. பெட்டி ----------- அநேகநாள் தங்கியிருந்தது
14. தாவீது பெலிஸ்தரின் நாட்டிலே --------, -------- குடியிருந்தான்.
15. பேசோர் ----------- கடக்கமாட்டாமல் நின்று போனார்கள்.
16. சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ? என்பது --------
17. இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடி -------- மலையிலே வெட்டுண்டு விழுந்தார்கள்.
18. இஸ்ரவேலர் -------- அருவருப்பானார்கள்.
19. ஒருவன் தன் -------- கண்டுபிடித்தால் அவனைச் சுகமே போகவிடுவானோ?
20. முதியோர் மொழிப்படியே -------- பிறக்கும்.
21. தாவீது அதுல்லாம் என்னும் -------- போனான்.
22. கர்த்தர் ஜனங்களில் -------- அடித்தார்
23. தாவீது தன் கையினால் -------- வாசித்தான்.
24. ஏசேல் என்னும் -------- உட்கார்ந்திரும்.
25. அந்நாட்களிலே -------- அபூர்வமாயிருந்தது.

**குறிப்பு : விடை எழுதுபவர்கள்**
**உங்களுடைய பெயர், முகவரியை தெளிவாக எழுதவும்.**

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.04.2025



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

நமது மதுரை Camp Site-ல் மேற்கொள்ளப்பட்டு வரும்

# மாபெரும் சரித்திரம் பதிக்கும் திட்டம்

மாபெரும் மாநாட்டு அரங்கங்கள். மேலய நாட்டுத்தரத்தில் கட்டப்படுகிறது.

## இந்தத் திட்டத்தின் மொத்த தேவை ரூ.20 கோடியாகும்

நாம் கட்டப்போகும் கட்டிடங்களின் பரப்பளவு சுமார் ஒரு லட்சம் சதுர அடிகள்
(1,00,000 square Feet)

TRADE SYNDICATE
என்ற கட்டுமான நிறுவனம், சகலமும் உள்ளடங்களிய அதாவது:
Building Structure, Interior and Exterior, Furniture,
all Electrical Fittings, AC + Power Generators and LED TV Mega Boards.
அனைத்தும் செய்து முடிப்பதற்கு

ஒரு சதுர அடிக்கு ₹ 2050 என பேசி, மொத்த தொகை ₹ 20,50,00,000
(இருபது கோடியே ஐம்பது இலட்சமாகும்)
விசுவாசத்தோடு வரும் 2025, ஜூலை மாதம் வேலையை முடிக்கத் தீர்மானித்து,
வேலை மிகத்துரிதமாய் நடந்து கொண்டிருக்கிறது.

**தமிழ் நாட்டில் நாம் 2000 சபைகளைக் கொண்ட**
**மிகப்பெரிய பெந்தெகொஸ்தே ஸ்தாபனம்**

**சுமார் இரண்டு இலட்சத்திற்குமேல்**
**(2,00,000) விசுவாசிகளைக் கொண்ட ஸ்தாபனம் நமது தமிழ் பிரதேசம்?**

நமக்கு தேவன் சொந்தமாக சுமார் முப்பது (30) ஏக்கர் நிலம் தந்திருக்கிறார்.
மதுரை, நாகமலை அடிவாரத்தில் இயற்கை எழில் மிகுந்த அழகிய இடம் அது.
25 ஆண்டுகளாகியும் அதில் சரியான ஜெப மையம்,
மாநாட்டு அரங்கங்கள் கட்டப்படாமல் இருக்கின்றது.
இப்பொழுது நாம் கட்டப்போகிற கட்டிடங்களைக் குறித்தப் படங்களை வழங்கியுள்ளோம்.
நாமெல்லாரும் ஒன்றிணைந்தால் இதிலும் இரண்டு மடங்குகூட சாதிக்க முடியும். எப்படி?

நமது ஸ்தாபனத்திலுள்ள ஒரு விசுவாசி ஒருமுறை மட்டும் ஒரு சதுர அடிக்குரிய தொகை **₹2,050** கொடுத்தால், முறையே சுமார் ₹ **1,50,000.** விசுவாசிகளும் மனமுவந்து கொடுத்தால் வரும் தொகை:**₹30,75,00,000.**

## கர்த்தர் தந்திருக்கின்ற நீங்கள்தான் எங்கள் பெலம்

SCAN & PAY

UPI ID:qr.ttpaog@sib

| | |
|---|---|
| Account Name | : **Assemblies of God Building Fund** |
| Account Number | : **0475053000016756** |
| IFSC | : **SIBL0000475** |
| Bank Name | : **South Indian Bank** |
| Branch Name | : **Madurai West** |

சரித்திரம் பதிக்கும் இந்த மாபெரும் திட்டத்தில், அனைத்துப் போதகர்களும்,
விசுவாசிகளும் நிர்வாகக் குழுவோடு ஒருமனமாய் கைகோர்த்தால்,
கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காக மகிமையானவைகளைச் சாதிக்கலாம்.
**இது உங்களுக்கு ஒரு சிறிய தொகைதான்,**
**நாம் ஒன்று சேரும்போது, சிறு துளி பெருவெள்ளமாகும்.**

இதன் புகைப்படங்களை பின் பக்கம் பார்க்க

Registered News Paper Regd. No. 8206 / 62

## நமது மதுரை Camp Site-ல் கட்டப்பட்டுவரும் கட்டிடங்களின் தோற்றம்

# THE THAMIZH PRADHESA ASSEMBLIES OF GOD



BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664